
# தமிழரசு

16-5-1997






ஓராண்டு

சாதனை

மலர்

ரூ. 3.00



ஜனநாயக ஒளி பரவிட
உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை
நடத்திய நல்லாட்சிக்கு
எங்கள் நல்வாழ்த்து!
டாக்டர் ஜி. சூடாமணி
மேயர்,
சேலம் மாநகராட்சி.




# கலைஞர் ஆட்சியின்














# ஆண்டு பணிகள் தொகுப்பு





**தமிழரசு**


திருவள்ளுவராண்டு 2028

வைகாசித் திங்கள் 2

மலர் : 27 இதழ் : 22

16.5.1997

விலை ரூ.3/-




2 & 4ஆம்
அட்டைப்படங்கள் உதவி :
திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.

# சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்!

**வேளாண்மைத் துறை**

- விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைத்திடும் வகையில் வாணி பத்தைச் சீரமைத்து மேம்படுத்திட 9 இடங்களில் புதிய வணிக வளாகங்கள். விளை பொருட்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு, விற்பனைக் குழுக்களின் நிதியிலிருந்து இலவச மருத்துவ வசதி வழங்கிட முன்னோடித்திட்டம், முதற்கட்டமாக நடப்பாண்டில் 10 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் நடைமுறை படுத்தப்படும்.
- மஞ்சளுக்குப் பெயர் பெற்ற ஈரோடுக்கு அருகில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின் மூலம் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க அரசு முடிவு.
- தர்மபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலம் கூட்டு முயற்சியாக ரூ.125 இலட்சம் செலவில் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படும்.
- மழை வளத்தைப் பெருக்கவும், சுற்றுப்புறச் சுகாதாரத்தைச் சீரமைக்கவும் இவ்வாண்டு 75 ஊராட்சி ஒன்றியங்களில் சாலையின் இருபுறமும் நிழல் தரும் மரங்கள் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.
- இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைத்த உடன் அதன் அடிப்படையில் தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை மேம்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.
- வேளாண்மையைச் சார்ந்த தொழில்களான மலர், காய்கறி, காளான் வளர்ப்பு மற்றும் அவற்றின் ஏற்றுமதிக்குக் கடனுதவி வழங்க நபார்டு நிறுவனம் ஓர் அதிநுட்ப வேளாண்மை நிதி நிறுவனத்தை நிறுவியுள்ளது. இந்தியாவிலேயே இந்தத் திட்டம் தொடங்கப்படுகிற மூன்று மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும்.
- உலக வங்கி உதவியுடன், தமிழ் நாட்டின் வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்காக, ரூ.103.79 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இராமநாதபுரம், காமராஜர், நெல்லை கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில்-டென்மார்க் நிதி உதவியுடன் ரூ.41 கோடி செலவில் காற்று அரிப்பைத் தடுக்கும் வகையில் புதியதோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**




- கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென நடப்பாண்டில் இலவச வீட்டு மனைத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- நலிவுற்ற மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பினருக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்கு, கடந்த ஆண்டில் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நடப்பாண்டில் ஒதுக்கீடு ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டது.
- கிராமப்புறங்களில் வாழும் முன்னேறிய வகுப்பினருக்கும் இலவச வீட்டு மனை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 3 கள்ளர் நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.
- 10 கள்ளர் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட வசதிகளும் கூடுதலாக 3 கள்ளர் பள்ளிகளில் 10 வகுப்பறைகளும் கட்டப்படும்.
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய கல்வித் துறையிலும், சமுதாயத் துறையிலும் பின்தங்கியுள்ள மக்கள் 69 சதவிகித இட ஒதுக்கீட்டின் பயன் முழுவதையும் பெறுவதற்கான முறையில், சட்டரீதியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் தேவையான முயற்சிகள் எடுக்கவும் இந்த அரசு உறுதி ஏற்றுள்ளது.

**பால் வளத்துறை**

- காரைக்குடி பால் பண்ணையில் பால் பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டரிலிருந்து 60 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்பட்டது.
- சிவகங்கை மற்றும் பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையங்களின் குளிரூட்டும் திறன், நாளொன்றுக்கு 20 ஆயிரம் லிட்டரிலிருந்து 30 ஆயிரம் லிட்டராக அதிகரிக்கப்பட்டது.
- திருநெல்வேலி பால் பண்ணையின் திறன் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டரிலிருந்து 1 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டது.
- சங்கரன்கோயில் பால் குளிரூட்டும் நிலையத்தின் திறன், நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்பட்டது.


**பத்திரப் பதிவுத்துறை**

- ரூபாய் ஆயிரத்திற்கு மேற்படாத மதிப்புள்ள சொத்து உரிமை மாற்ற, விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்கு.
- முத்திரைத் தாள்கள் அதன் முகப்பு விலையில் வழங்கப்படும். முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கான தரகுத் தொகை அதிகரிக்கப்படும்.

- முத்திரைத் தாள்கள் எளிதாக, கட்டுப்பாடு இன்றி, உரிய விலைக்குக் கிடைக்கச் செய்ய சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முத்திரைத் தாள் விற்பனை மையம்.
- இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, புதுப்பிக்கப்படும் ஆவண எழுத்தர் உரிமங்களும், ஓராண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும் நகல் எழுத்தர் உரிமங்களும் இனி ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க நடவடிக்கை. மற்ற மாநிலங்களில் தமிழகத்திலுள்ள சொத்துக்களைப் பதிவு செய்வதன் மூலம் ஏற்படும் வரி இழப்பினைத் தவிர்க்க, பத்திரப் பதிவுச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர் நலத்துறை

- முதுகலைப் பட்டம் பயில்வோருக்கு ஆதி திராவிடர் நலத்துறையின் சார்பில் இதுவரை விடுதி கட்டித் தரப்படவில்லை. சென்னையில் விடுதி கட்டித் தரப்படும்.
- விடுதிகளில் சேர விரும்பும் ஆதி திராவிட மாணவ மாணவியரின் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூ.14 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தப்படும்.
- ஆதி திராவிட மக்களின் நல்வாழ்வுக்கு அரும் பணியாற்றிய சுவாமி சகஜானந்தாவிற்குச் சிதம்பரத்தில் நூற்றாண்டு விழா நினைவகம் கட்ட ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு.
- அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான காலியிடங்கள் இரண்டு மாத காலத்திற்குள் நிரப்பப்படும்.
- இந்திய ஆட்சிப் பணி தேர்வுக்கான முன்னேற்றத் தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயில்வோருக்காக உணவுக் கட்டணம் ரூ.400-லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்படும்.
- தமிழ்நாடு தொழிற் கல்விக்கான நுழைவுத் தேர்வு எழுதும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கான விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம் இவற்றைச் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு.
- ஆதி திராவிட மாணவர்களுக்காக நடப்பாண்டில் ரூ.1.70 கோடி செலவில் 40 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும். ஐந்து நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்படும்.




## ஊனமுற்றோர் நலன்

- உடல் ஊனமுற்றோரை சமூகத்தில் பயனுள்ள குடிமக்களாகச் செயல்பட வழிவகை செய்ய நடப்பாண்டில் எல்லா மாவட்டங்களிலும் மறுவாழ்வு மையங்கள் தொடங்கப்படும்.
- பேருந்துகளில் சாதாரண வழித் தடங்களில் மாத்திரமல்லாமல் - விரைவுப் பேருந்து வழித் தடங்களிலும், கண்ணற்றோர், கால்முடமானோர் ஆகிய ஊனமுற்றோருக்கு இலவசப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

- வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள- ஊனமுற்றவர்களுக்கு செயற்கைக்கால் அல்லது கைகள் பொருத்துவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும்.




**சத்துணவு**

- சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகளை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பதை, மத்திய அரசின் ஐந்தாவது நிதிக்குழுவின் அறிக்கை மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு மாநில அரசின் அலுவலர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்கப்படும்போது பரிசீலிக்கப்படும்.

- இந்த ஆண்டு ஐம்பது சத்துணவுக் கூடங்களில் மகளிர் நல மையங்கள் தொடங்கப்படும். இங்கே மகளிர், சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம், சுயவேலைவாய்ப்பு பயிற்சி, அறிவொளி, வாழ்க்கைக் கல்வி போன்றவற்றை அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

**சமூக நலம்**

- கிராமப்புறங்களில், பெண்கள் சுகாதாரம், சத்துணவு, குடும்பநலம், சுயவேலை வாய்ப்புப் பயிற்சி, அறிவொளி, வாழ்க்கைக் கல்வி போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வழி வகை செய்ய, சோதனை அடிப்படையில் இந்த ஆண்டு 50 சத்துணவுக் கூடங்களில் மகளிர் நல மையங்கள் தொடங்கப்படும்.

- குடும்பத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர் 250 பேருக்குத் தேவையான முதலீட்டில் ரூ.50,000 வரம்புக்குள் பத்து சதவீதத் தொகை மானியமாக வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- மத்திய அரசின் உதவியுடனான, வாணிபம் சார்ந்த பெண் தொழில் முனைவோர் உதவி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் TREAD எனப்படும் திட்டம், முதற்கட்டமாகச் சென்னையில் 5000 பெண்களைத் தேர்ந்தெடுத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் அவர்களுக்குத் தேவையான நிர்வாகம் மற்றும் தொழில் நுணுக்கப் பயிற்சி அளித்து அவர்கள் தொழில் மற்றும் வாணிபத்தினைத் துவங்க நிதி உதவி செய்யப்படும்.

- 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தொகை' 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்வு.

- கடந்த ஆண்டு பத்துக் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதற்கு மாறாக-இந்த ஆண்டிற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கி, 20 ஆயிரம் மணமக்கள் உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை 300 ரூபாயிலிருந்து, 500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- கலப்புத் திருமண தம்பதியருக்கு வழங்கப்படும் 'அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்ட'த் தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டது.

### தமிழ் ஆட்சி மொழி-பண்பாடு

- ஐந்தாம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு முதல் பாகமாக (Part-I) தமிழ் கட்டாயப் பாடமாகவும், 2வது பாகமாக (Part-II) ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் இருக்கும். மொழிச் சிறுபான்மையர் தங்கள் தாய்மொழியைக் கற்க விரும்பும் நிலையில் 15 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அதற்குரிய மொழி ஆசிரியரை நியமிக்க வழி வகை செய்யப்படும்.
- சிறு வயதிலேயே இசை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவிக்கப் புதுமுயற்சியாக 5 மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்படும்.
- தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்தினருக்கு காப்புநிதி வழங்கவும் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.


### கைத்தறி

- கடந்த ஆண்டு அரசு பொறுப்பேற்ற நேரத்தில் தமிழகத்தின் 18 கூட்டுறவு நூற்பாலைகளும் இயங்க முடியா நிலையில் நட்டத்தில் இயங்கின. ஆனால் தற்போது 8 கூட்டுறவு நூற்பாலைகள் இலாபத்தில் இயங்கிவருகின்றன.
- நெசவாளர்க்குத் தறியுடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் மட்டும் 1000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
- கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் நலன் காக்கப் புதிய ஜவுளிக் கொள்கை ஒன்று விரைவில் அறிவிக்கப்படும்.
- இந்தியாவிலேயே முதன்முறையாக 60 வயதிற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு ரூ.150 ஒய்வூதியம் வழங்க நடவடிக்கை.
- கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 1000 வீடுகள் கட்ட நபர் ஒன்றுக்கு ரூ.35 ஆயிரம் என வழங்கி வந்த கடன் தொகை ரூ.45 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. கைத்தறி நெசவாளர் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு கருணைத் தொகை ரூ.3000-லிருந்து ரூ.500-ஆக உயர்த்தப்படும்.
- பருத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்க - கைத்தறி, விசைத்தறி, மின்துறை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக விரைவில் தமிழகத்தில் முதல் தடவையாக ஜவுளிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.
- கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.15,000_லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தப்படுகிறது.



### காதி மற்றும் கதர் கிராமத் தொழில்துறை

- கோவை மாவட்டம் கலிக்க நாய்க்கன் பாளையத்தில் கடந்த 17 ஆண்டு காலமாக மூடிக் கிடந்த பனஞ்சீனி ஆலை செப்பனிடப்பட்டு திறக்க நடவடிக்கை.




- மாதவரம் பால் பண்ணைக்குச் சொந்தமான சுமார் 600 பனை மரங்கள் கடந்த 6 ஆண்டு காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்துவந்தன. அப் பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பதநீரை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- மாதவரத்தில் மூடிக் கிடக்கும் பனஞ்சீனி ஆலை அடுத்த 2 மாதத்தில் திறக்கப்படும். இதன் மூலம் அப்பகுதியிலுள்ள 500 பனைத் தொழிலாளர்கள் புதிதாக வேலை வாய்ப்புப் பெறுவர்.

- கடப்பாக்கத்தில் 1993 முதல் செயல்படாமல் மூடிக்கிடக்கும் பனஞ்சீனி ஆலை வரும் மே மாதத்தில் திறக்கப்படும். இதனால் அப்பகுதியிலுள்ள 500 பேருக்குப் புதிதாக வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

- நலிவடைந்திருந்த, மத்தூர் பனஞ்சீனி ஆலை சீரமைக்கப்பட்டு தற்போது ஆலை உற்பத்தியினைத் தொடங்கி உள்ளது.

**ஊரகத் தொழில்**

- தொழில் முனைவோர்க்கு நிதி உதவி மற்றும் அடிப்படை வசதிகள் வழங்க டி.ஐ.ஐ.சி-சிட்கோ இணைப்புத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

- ரூ.552 இலட்சம் செலவில் மைய அரசின் உதவியுடனும், இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடனும், கோவை மாவட்டம் பல்லடம் பகுதியில் அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் கூட்டுறவு தொழிற்பேட்டை.

- கிராமப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் மூலப் பொருட்கள் மற்ற தேவைகளின் அடிப்படையிலும் அப் பகுதிவாழ் மக்கள் வேலை வாய்ப்புப் பெறும் வகையிலும் குறைந்தது 5 ஏக்கர் அளவு நிலத்தில் தொழில் கூட்டுறவுப் பேட்டைகளை, முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் அமைக்க நடவடிக்கை.

- பல்வேறு துறைகளிடமிருந்து சட்டரீதியான அனுமதிகளை விரைவில் பெற, ஒருமுனைத் தீர்வுக்கு மாற்றி அமைக்கப்பட்டு, 'சிறுதொழில் குறை தீர்க்கும் குழு' எனப்படும் புதிய குழுவாக்கப்பட்டது.

- மகளிர் தொழில் முனைவோர், குறிப்பாக முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுவதில் அடையும் சிரமத்தைக் களைய அவர்களுக்குத் திட்ட மதிப்பில் 10 விழுக்காடு அதிகபட்சம் ரூ.50 ஆயிரம் ஈட்டுத் தொகையாக மானியமாக வழங்க முடிவு.

- இத்திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் சுமார் 4000 தொழில் நிலையங்களுக்கு ரூ.21 கோடி உதவியளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.29.04 கோடியில் சுமார் 5000 தொழில் நிலையங்களுக்கு மேலும் உதவியளிக்க முடிவு.

- ஆர்வமுள்ள, தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்க கிண்டியில் ஒரு தொழில் முனைவோர் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

- தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் நிலம் கையகப்படுத்தும் இருங்காட்டுக்கோட்டையில், சுமார் 100 ஏக்கர் நிலம் பெறப்பட்டு, தொழிற்பேட்டை அமைக்க 'சிட்கோ' நடவடிக்கை.

- ஆவடி அருகே வெள்ளத்தூர் மற்றும் பொத்தூர் அருகே 339 ஏக்கர் அரசு நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு தொழிற்பேட்டை ஒன்று உருவாக்கப்படும். நடப்பாண்டில் குறைந்தது 50 தொழிற்கூடங்களும் 100 மேம்படுத்தப்பட்ட மனைகளும் அமைக்கப்படும்.

- ஆவடி மற்றும் ஒசூரில் குறுந்தொழில் முனைவோர்க்குத் தொழிற்கூடங்கள் கட்ட முடிவு. நடப்பாண்டில் 100 தொழிற்கூடங்கள் கட்ட நடவடிக்கை.

- கிண்டி திரு.வி.க.தொழிற்பேட்டையில் 2 இடங்களில் தொழிற்கூடங்கள் கட்ட சிட்கோ முடிவு.

**இந்து சமய அறநிலையத்துறை**


- இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகத்தைச் சீர் செய்யும் முதற்கட்டப் பணியாக, திருக்கோயில் நிர்வாக வாரியத்தையும் மாவட்டக் குழுக்களையும் கலைத்துவிட்டு இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகம் அரசு அலுவலர்களான ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் வகையில் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- பூசாரிகள் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் 1500 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் வழங்க ஆணை.

- இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் கோயில்களில் கருணை இல்லங்கள் 1975ஆம் ஆண்டில் துவக்கப்பட்டன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் செலவில் அப்போது 25 சதவீதத்தை அரசு வழங்க வகை செய்யப்பட்டது. ஆனால் இடைக்காலத்தில் அரசு மானியம் வழங்கப்படவில்லை. தற்போது 22 கோயில்களில் 735 ஆதரவற்ற குழந்தைகளுடன் திருக்கோயில்களின் முழுச் செலவில் கருணை இல்லங்கள் செயல்படுகின்றன. இந்தக் கருணை இல்லங்களுக்காகும் செலவில் 50 சதவீதத்தை இனி அரசே ஏற்கும். நடப்பாண்டில் மேலும் 875 சிறுவர் சிறுமியர்களைக் கொண்ட 25 கருணை இல்லங்கள் புதிதாக அமைக்கப்பட உள்ளன. இவற்றில் 15 கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கானவையாகும்.


- அரசின் கொள்கைக்கேற்ப, இந்து சமயத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இனங்களைச் சேர்ந்த வசதியற்றவர்கள் திருமணத்திற்காகத் திருக்கோயில்களின் நிதியிலிருந்து, திருமணம் ஒன்றிற்கு ரூ.3 ஆயிரம் வரை செலவிடப்படுகிறது. இவ்வகையில் 50 திருமணங்கள் இதுவரை நடைபெற்றுள்ளன. மேலும் 157 மணமக்களுக்கு 'இலவசத் திருமணங்கள்' செய்வதற்கான பெயர்ப் பட்டியல் வரப் பெற்றுள்ளது.

- பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் மத நல்லிணக்க




தொடர்ச்சி 54ஆ-ம் பக்கம்

தொகுதிக்கு ஒரு
நவீன கிராமம் -
'அண்ணா மறுமலர்ச்சித்
திட்டம்' காணும்
அரசினை வாழ்த்துகிறோம்!




நல்வாழ்த்துகள்

**சக்தி பீட்ஸ் மாட்டு தீவனங்கள்**

கோபி

# முன்னேற்றப்பாதையில் தமிழகம்


- திரு. ஆலடி அருணா
சட்டத்துறை அமைச்சர்

தமிழக மக்கள், சென்ற ஆண்டு நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவின்பின் அமைந்த இந்த அரசுக்கு அமோக ஆதரவு நல்கி வருவதை அனைவரும் அறிவீர்கள். நாங்களும், எங்கள் அரசும் இந்தத் தீர்ப்பு எங்கள் கொள்கைகள் மீது மக்களுக்குள்ள நம்பிக்கை மீண்டும் உறுதிப் படுத்துவதாகவும், தமிழ்நாடு இழந்த பெருமையை மீண்டும் பெற அளித்த நல்வாய்ப்பாகவும் கருதுகிறோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது தேசிய அளவில் நிலவிய அரசியல் நிலவரத்தைக் கருதிப் பார்ப்பது நலம். பொறுப்பேற்ற நாளில் இருந்தே நாங்கள் இதற்காக எங்களை அர்ப்பணித்துக் கொண்டோம். உண்மையான கூட்டாட்சித் தத்துவக் குறிக்கோளுடன் அமையக்கூடிய ஆட்சியை மத்தியில் ஏற்படுத்த அன்றைய சூழல் நல்லதொரு வாய்ப்பினை நல்கியது. ஐக்கிய முன்னணி என்பது இந்தியாவில் நிலவும் பல்வேறுபட்ட சமூக கூட்டு வார்ப்பாக அமைந்துள்ளது. இந்தியாவில் குறைந்த பட்சத் திட்டம், இப் பரந்த நாட்டின் எண்ணிறந்த சமூக அரசியல் நடப்பியல்களின் ஆவல்களைப் பிரதிபலிக்கிறது. எதிர்பார்த்தபடி தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், மத்திய மாநில அரசுகளின் உறவு முக்கிய இடம் பெற்று வருகிறது.

மாநிலங்களுக்கு அதிகத் தன்னாட்சி உரிமைகளை வழங்குவதன் மூலமே பல்வேறு இன சமுதாயங்களின் வேறுபட்ட நலன்களைக் காக்க இயலும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது.

**''செய்வதைச் சொல்வோம்; சொல்வதைச் செய்வோம்''** என்ற கொள்கையில் இவ்வரசு நம்பிக்கை கொண்டுள்ளது. அதிகாரப் பரவல் தேவைகளை நாங்கள் நம்புகிறோம். இவ்வரசு, பொறுப்பேற்ற சில தினங்களுக்குள்ளாகவே, உள்ளாட்சி மன்றங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி, தேர்தல் நடத்தியது. உள்ளாட்சி மன்றங்களுக்குக் கணிசமான அதிகாரங்களைப் பகிர்ந்தளித்துள்ளது. இந்த அமைப்புகளுக்குப் போதிய நிதி வழங்கியுள்ளது. திட்டங்களை உருவாக்குதல், நிறைவேற்றுதல், கண்காணித்தல் ஆகியவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் கிராம சபைகளையும் ஈடுபடுத்த




நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இதன்மூலம் தமிழ்நாட்டில் உண்மையான உள்ளூர் சுய ஆட்சி மலரும்.

அரசு மீது மக்களுக்கு மீண்டும் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால் அரசு அமைப்புகளிலுள்ள ஊழல் பெருச்சாளிகளைக் களையெடுப்பதுடன், அரசு அமைப்பு முறையில் மாற்றங்கள் செய்யவும் வேண்டும் என்பதை உணர்ந்த இந்த அரசு - பல புதிய கொள்கைகள், திட்டங்கள், நடைமுறை மாற்றங்களைச் செய்து வருகிறது. அவற்றில் சில வருமாறு:

1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இதன் காரணமாக இனிமேல் பொதுமக்கள் எளிதில் அரசை அணுகி, தகவல்களைப் பெறமுடியும். இதுவரை சிலருக்கு மட்டுமே இது சிறப்புரிமையாக இருந்து வந்தது.

2. கண்ணியமான வாழ்க்கை நடத்த மக்களுக்குத் தேவைப்படும் அடிப்படை உரிமைகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்ய, மனித உரிமை ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. சாதி மோதல்களை முளையிலேயே கிள்ளி எறிந்து அதனைப் பரவவிடாமல் தடுக்க காவல்துறையில் அதிவிரைவுப்படை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு நெருக்கமான வர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்படிவங்கள் கிடைத்துவந்து, எங்கும் பரவலாக இருந்து வந்த ஊழல் மலிந்த தனி ஒப்பந்தப்புள்ளி முறை ஒழிக்கப்பட்டு விட்டது. ஒளிவு மறைவற்ற ஒப்பந்த நடைமுறை குறித்த சட்டம் ஒன்று நிறைவேற்றப்படவுள்ளது.

4. முன்னாள் ஆட்சியாளர்களின் தங்கச் சுரங்கமாக விளங்கி வந்த நியமன அடிப்படையில் சுரங்கம் வெட்டும் உரிமை அளிக்க வகை செய்யும் சிறு கனிம விதிகளில் 39ஆம் விதி திருத்தப் பட்டுவிட்டது. இனி, இந்தச் சுரங்க உரிமை பகிரங்க ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

5. நிருவாகத்தில் புரையோடியுள்ள ஊழல்களை ஆழ்ந்து ஆய்வு செய்யவும், முறையான மாற்றங்களைத் தெரிவிக்கவும் நீதிபதி இராமானுஜம் கமிஷன் நியமிக்கப்பட்டது.

6. நிலவரி நிருவாகத்தைப் புதிரான சிக்கலானதாக இன்றி எளிமையாக்கவும், நடைமுறை திருத்தங் களைத் தெரிவிக்கவும், மாநிலத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

7. மாநிலத்தின் புஞ்சை நில மேம்பாட்டிற்கான வழிவகைகளைத் தெரிவிக்க இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமியைத் தலைவராகவும், உலக அளவில் புகழ்பெற்ற வேளாண் அறிவியலாளரான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் போன்றவர்களை உறுப்பினர் களாகவும் கொண்டு, நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

8. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி நிலையை மேம்படுத்த முதலமைச்சர் தலைமையிலான உயர்நிலைக்குழு அவ்வப்போது நாட்டின் முன்னணி தொழிலதிபர்களுடன் கலந்தா லோசித்து வருகிறது.

9. "தொழில் பகுதி மேம்பாட்டு அமைப்பு" ஒரே இடத்தில் அனைத்து வசதிகளையும் பெறும் ஏற்பாடு, ஆகியவற்றுக்கு, தொழில்களை விரைந்து செயல்படுத்த தேவையான அனைத்து அனுமதிகளையும் உள்ளூரிலேயே வழங்க அதிகாரம் பெற்றுள்ளது. மாநிலத்தின் தொழிற்பேட்டையில் இது இடம்பெற்றுள்ளது.

10. அமைப்பு ரீதியில்லாத துறைகளைச் சேர்ந்த தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

11. இம்மாநிலத்தின் வரி அமைப்பினை எளிதாக்கி முறைப்படுத்த திரு. சி.தங்கராசு, (ஓய்வுபெற்ற இ.ஆ.ப. அதிகாரி) தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. விற்பனை வரி அமைப்பு களைத் திருத்தியமைப்பது தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துரைகள் செயல்படுத்தப் பட்டுள்ளன.


12. இம்மாநிலத்தில் பத்திரப்பதிவு நடைமுறைகளை ஒழுங்குபடுத்த ஒரு நிபுணர் குழு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுவின் கருத்துரைகள் முனைப்புடன் பின்பற்றப்படுகின்றன.

இந்த அரசு, அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு இது ஒரு சிறு எடுத்துக்காட்டாகும். இம்மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுவரும் இத்தகைய பல்வேறு திட்டங்கள் இம்மாநிலத்தில் தொழில் வர்த்தகத் துறைக்கு இந்த அரசு மீதுள்ள நம்பிக்கையை வெளிபடுத்துகின்றன.

**ஒரு புதிய தொழிற் சூழல்**

தொழில் முனைவோர்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையில் மாநிலத்தின் தொழிற் கொள்கைகள் செம்மையாகவும் தெளிவாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் ஒன்று மின்சக்தி என்பதை உணர்ந்துள்ள காரணத்தால், இருபது சிறு மின் உற்பத்தித் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. பதினோரு இடங்களுக் கான ஒப்பந்தப் புள்ளிகள் மிகக் குறுகிய காலத்தில் முடிவு செய்யப்பட்டது ஒரு சாதனையாகும்.




ஒருவழி அனுமதி, புதிய பலனுள்ள திட்டம் ஒன்றின் கீழ் முன்னோடியாக மாநிலத்தின் தொழில் நகரியங்களில் ஒரு முனையில் புதிதாகத் தொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்குத் தேவைப்படும் அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு வகைசெய்யும் ஒரு தனிச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தொழிற்சாலை மூலப்பொருட்கள் உதிரி பாகங்கள், உற்பத்திக்குத் தேவைப்படுகிற ஏனைய இரு பொருட்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், பணி நிறைவுபெற்ற பொருட்களுக்கான விற்பனை வரியுடன், விற்பனை வரி வீதங்கள் குறைக்கப் பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் பல்வேறு உள்நாட்டு அங்காடிகளில் போட்டியை உருவாக்கும். இதனால் விற்பனை அதிகரிக்கும்.

முடிவெடுக்கும் நடைமுறையை விரைவு படுத்துவதற்கு இயலும் வகையில் பல்வேறு நிலைகளில் அதிகாரம் பிரித்துக் கொடுக்கப் பட்டுள்ளது.


சிறந்த அடிப்படை வசதி, நீண்ட கண்ணோட்டமும், ஒத்துணர்வும் கொண்டதாக உண்மைத் தன்மையுடனும், கடமைப் பற்றுடனும், கடும் பணிபுரியும் திறமை மிக்க தொழிலாளர்கள், பொறுப்பும் - ஆளும் தன்மையுங்கொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள், வெளிப்படையாக முடிவெடுப்பதை ஊக்குவிக்கும் விதிகள் நடைமுறைகள் ஆகியவை தமிழ்நாட்டில் பாதுகாப்பாகத் தொழிலில் முதலீடு செய்ய விரும்புகிறவர்கள் தங்களது முதலீடுகளைச் செய்ய ஏற்ற இடம் தமிழ்நாடுதான் என்ற நிலைக்குவர வழி வகுக்கும்.

**பெரிய தொழில் திட்டங்கள்**

கடந்த ஓராண்டில், இவ்வரசு மேற்கொண்ட முயற்சிகள் பலனாக, நம் மாநிலத்தில் பின்வரும் பெரிய தொழில் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

1. முதல் ஓராண்டிலேயே 1,25,000 கார்கள் தயாரிப்பதற்கு ஏற்றவாறு தென் கொரியாவின் ஹுண்டாய் மோட்டார்கார் தயாரிப்புத் திட்டம்.
2. ப்ளோட் கிளாஸ் தொழிற்சாலைகள் இரண்டு. இங்கிலாந்தின் பில்கிங்டனிலிருந்து ஒன்று, மற்றொன்று, பிரெஞ்சு நாட்டில் செயின்ட் கோபெயினிலிருந்து.
3. கொரியா நாட்டின் ஹம்ஹோ டயர்கள் திட்டம்.
4. இந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்தின் உடலுழைப்புடன் கூடிய லான்சர் கார் தயாரிப்புத் திட்டம்.
5. அசோக் லேலண்டின் விரிவாக்கத் திட்டம்.
6. டிஏஎப் விரிவாக்கத் திட்டம்.
7. மோட்டார் வண்டி தயாரிக்கும் மூன்று இடங்களில் மகேந்திரா போர்ட், ஹீண்டாய் மற்றும் மிட்சுபிஷி ஹிந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

நம் அரசு, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலிருந்து புதிய முதலீடுகளைப் பெறுவதற்குச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலுள்ள தனியார் துறை, தொழில் பூங்காக்கள், முதல் தரமான நெடுஞ்சாலைகள், நவீன துணை நகரங்கள் மின் உற்பத்தித்




திட்டங்கள் போன்றவற்றை அமைப்பதற்குத் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு அதிக ஆர்வம் காட்டுகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில், தனியார் துறை முதலீட்டைப் பெற்றுத் தருவதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

புதிய எண்ணூர் துறைமுகத்தைச் சுற்றியுள்ள சுமார் 7,000 ஏக்கர் நிலத்தில், பெட்ரோலிய இரசாயனத் தொழில்களுக்கான தொழில் அரங்கம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. திரவ இயற்கை எரிவாயு முனையமும், இணைந்த மின் உற்பத்தி நிலையமும் இங்கு தொடங்கப்படும். பெட்ரோலிய இரசாயனத் தொழில்களுக்குத் தண்ணீர் மிக முக்கியமான இடுபொருளாக விளங்குவதால், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை நன்னீராக மாற்றுவதற்கு, சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நன்னீர் புதிய பெட்ரோலிய இரசாயன மற்றும் ஏனைய வளாகங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும்.

தமிழ்நாட்டிலும், அண்டை மாநிலங்களிலும் வளர்ந்துவரும், மோட்டார் வண்டி தயாரிப் பாளர்களுக்கு உலக அளவில் தரமான கண்ணாடி, மோட்டார் வண்டி துணைப்பாகங்கள் எளிதில் கிடைப்பதற்கு இயலும் வகையில் சென்னைக்கு அருகில், மோட்டார் வண்டி துணைப்பாகத் தயாரிப்புப் பூங்கா ஒன்றைத் தொடங்கவும் 'டிட்கோ' நிறுவனம் உத்தேசித்துள்ளது. பாரம்பரியமாக மோட்டார் வண்டித் துணைப்பாகங்கள் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டு வந்தபோதிலும், புதிய துணைப் பாகத் தயாரிப்புத் தொழிற் பிரிவுகளைத் தொடங்குவதற்கு மாபெரும் வாய்ப்பு உள்ளது.

கடலூர், குளச்சல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலும், ஏனைய இடங்களிலும் நவீன வசதியுடைய துறைமுகங்களை ஏற்படுத்துவதில் பங்குபெறத்தனியார் துறையை வரவேற்க அரசு கருதுகிறது. சென்னைத் துறைமுகத்திலிருந்து எண்ணூருக்கும், சென்னைத் துறைமுகத்திலிருந்து தாம்பரத்திற்கும் மேனிலை விரைவுப் போக்கு வரத்துச் சாலை அமைக்கும் பணி மேற் கொள்ளப்படும். தனியார் துறை முதலீட்டைக் கொண்டு விரைவுப் போக்குவரத்துச் சாலை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. தனியார் துறையினர், சாலையைப் பயன்படுத்தும் வண்டிகளிலிருந்து சுங்கவரி வசூலிக்கலாம். வேளாண்மை சம்பந்தப் பட்ட தொழில்கள் மலர்ச்செடி வளர்ப்பு, உணவு பதப்படுத்தல் ஆகியவை முக்கியத்துவம் அளிக்க



வேண்டிய துறைகளாகக் கண்டறியப் பட்டுள்ளன. இந்தத் துறைகளில் புதிய திட்டங்களை ஏற்படுத்த 'டிட்கோ' நிறுவனம் தீவிர அக்கறை கொண்டுள்ளது.

எஸ்.கே.எம். பிரிவு நிறுவனத்துடன் கூட்டாக ரூ.40 கோடி முதலீட்டில் முட்டை செய்முறைப் படுத்தும்தொழிற்சாலை ஒன்று விரைவில் தொடங்கப்படும்.

ஜெயங்கொண்டத்தில் ஒருங்கிணைந்த சுரங்கம் வெட்டுதல் மற்றும் 500 மெகாவாட் திறன் கொண்ட பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்சக்தி உற்பத்தித் திட்டத்தை ஏற்படுத்த உலகளாவிய போட்டி விலைப்புள்ளி கோரப்படும்.

**செய்தித்தாள் காகிதம்**

நேஷனல் பிளைவுட் லிமிடெட் நிறுவனம் ஜெர்மனி நிறுவனமான 'செயிம்பிளிகேம்ப்' ஆகியவற்றுடன் கூட்டாக ரூ.150 கோடி முதலீட்டில், கரும்புச் சக்கையிலிருந்து அட்டை துகள் தயாரிக்கும் திட்டம் ஒன்றுக்கு அண்மையில் "டிட்கோ" நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்தி, கடலூருக்கு அருகில் கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு இதே போன்ற இன்னொரு தொழிற் சாலையை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

ரூ.40 கோடி முதலீட்டில் தரமான ஆணுறைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை 'டிட்கோ' நிறுவனம் விரைவில் ஏற்படுத்தும்.

ரூ.27 கோடி செலவில், அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த "அட்வான்ஸ்டு டைட்டிங்

ரிசோர்சஸ்" நிறுவனத்துடன் கூட்டுத்துறையில் 100 சதவீதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட மெட்டல் ஹாலிடே லேம்ப் ஏற்படுத்த ''டிட்கோ'' நிறுவனம் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது. கட்டுமானப் பணி விரைவில் தொடங்கும்.

இரசாயனத் தொழில் துறையில் கூட மாநிலம் பின்தங்கியதாக இல்லை.

''டிட்கோவின்'' கூட்டுத்துறை நிறுவனமான தமிழ்நாடு பெட்ரோலியப் பொருட்கள் நிறுவனம், ஏறத்தாழ ரூ.90 கோடி முதலீட்டில், 'CIBA' நிறுவனத்துடன் கூட்டாக, ''எப்பிகுளோரோ ஹைடியின்'' தயாரிப்புத் திறனை விரிவுபடுத்தி, ''எபாக்ஸிரெசின்'' தயாரிக்கப் பல்திறப்படுத்தும்.

ரூ.47 கோடி முதலீட்டில் 'NATCO' பிரிவு கம்பெனிகளுடன் கூட்டாகப் பெருமளவு மருந்துப் பொருட்கள் தயாரிக்கும் திட்டம் ஒன்று நிறை வேற்றப்பட்டு வருகிறது.

மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஆல்கஹால் தயாரிக்கும் திட்டம் ஒன்று, டிட்கோவின் பரி சீலனையில் உள்ளது.

ஆல்கஹால் அடிப்படையிலான இரசாயனப் பொருட்களைத் தயாரிக்கும் திட்டங்களை ஏற்படுத்த 'டிட்கோ' நடவடிக்கை எடுத்துவருகிறது.

பென்சாயில் இரசாயனப் பொருட்களைத் தயாரிக்கும் திட்டம் ஒன்று டிட்கோவின் பரிசீலனையில் உள்ளது.

நிலக்கரிச் சாம்பலை மூலப்பொருளாகக் கொண்டு கட்டடப் பொருட்களைத் தயாரிப்பதற்காக, "தாபர்" பிரிவு நிறுவனத்துடன் கூட்டாக நிலக்கரிச் சாம்பல் பயன்பாட்டுத் திட்டமொன்றை 'டிட்கோ' நிறுவனம் உருவாக்கி வருகிறது.

நார்வே நாட்டைச் சேர்ந்த 'Det Nolshe Hydro' நிறுவனம் தமிழ்நாட்டைச் சேர்ந்த W.S. பிரிவு நிறுவனம் ஆகியவற்றுடன் கூட்டாக, எண்ணூரில் பி.வி.சி. குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் ''டிட்கோ'' நிறுவனம் கையொப்பமிட்டுள்ளது.

நாப்தா வெடிப்பொருள் மற்றும் (ஒலிபைன்ஸ்) தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த ''டிட்கோ'' நிறுவனம் உரிமம் வழங்கியுள்ளது. மண்வெட்டும் பணி தொடங்கப்பட்டது.

நுரைமம், பாலி பிராபலின் (BOPP) பிஸ்பினைல், செறிவூட்டப்பட்ட கார்பன் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான திட்டங்களில் டிட்கோ நிறு வனத்துடன் சேருமாறு புகழ்பெற்ற தொழிற் சாலைகளிடமிருந்து செயற்குறிப்புகள் கோரப் பட்டுள்ளன.

புகழ்பெற்ற LMW தொகுதி நிறுவனம், 'டிட்கோ' நிறுவனமம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சி யாகத் தென்னக இரும்பு உருக்கி நிறுவனம் ரூ.450 கோடி முதலீட்டில் தேனிரும்பு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை அண்மையில் தொடங்கி யுள்ளது.

கூட்டு மதிப்புப் பொருட்களுடன் அலுமினியம் தயாரிக்கும் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் குரூப் அமைத்த ரூ.1000 கோடி செலவிலான தாமிரம் உருக்கும் திட்டம் செயல்படத் தொடங்கியுள்ளது.


இராமநாதபுரம் அருகிலுள்ள வாலிநோக்கத்தில் சிறிய அளவிலான கப்பல் பாகங்களைச் சிதைத்துப் பிரிக்கும் வசதியுள்ள பிரிவு, இவ்வாண்டு முற்றிலுமாகப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நன்கு மேம்படுத்தப்பட்ட பல தொழிற்பேட்டைகளை இவ்வரசு உருவாக்கி வருகிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய திருவண்ணாமலைசம்புவராயர் மாவட்டத்தில் உள்ள செய்யாறு வட்டத்தில் "சிப்காட்" நிறுவனம், புதிய தொழில் வளாகம் ஒன்றை அமைத்து வருகிறது. இத்தொழில் வளாகத்தை அமைக்க, ''சிப்காட்'' நிறுவனம் 1,350 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி வருகிறது.

அண்ணா மாவட்டம், பெரும்புதூர் வட்டத் திலுள்ள இருங்காட்டுக்கோட்டையில் புதிய தொழில் வளாகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு 'சிப்காட்' நிறுவனம் 1,829 ஏக்கர் நிலத்தைக் கண்டறிந்துள்ளது. பெரும்புதூர் அருகில் புதிய தொழில் வளாகங்களாக மற்றும் நகரியங்களாக மேம்படுத்துவதற்காக, வேறு மூன்று இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கோயம்புத்தூர் (தெற்கு) வட்டத்தில், புதிய தொழில் வளாகம் ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி வளர்ச்சிக் கழகம் (டாசிட்) பெரியார் மாவட்டம் பெருந்துறையில் ரூ.110 கோடி செலவிலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கங்கைகொண்டானில் ரூ.39.68 கோடி செலவிலும் தொழில்வளர்ச்சி

மையங்களை அமைத்துவருகிறது. 'டாசிட்' நிறுவனம், அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டத்திலுள்ள மாமண்டூர், பலாமாத்தூர் கிராமங்களிலும் அண்ணா மாவட்டம் பெரும்புதூர் அருகிலுள்ள மற்றொரு இடத்திலும் புதிய தொழில் வளாகங்களை அமைத்துவருகிறது.

தென் சென்னையிலுள்ள கேளம்பாக்கம் அருகில் 200 ஏக்கர் நிலப் பரப்பில் "எல்காட்" நிறுவனம், துணைநகரத்துடன் கணிப்பொறி இடுபொருள் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைக்கும். எல்காட் நிறுவனம், பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைந்து கோயம் புத்தூரில் மற்றுமொரு கணிப்பொறி இடுபொருள் பூங்கா ஒன்றை அமைக்கக் கருதியுள்ளது. இவ்வரசு பெருந் தொழில்களில் மட்டுமே கவனம் செலுத்த வில்லை. சிறு தொழில்களுக்கும் பெருந் தொழில்களுக்கு நிகராக ஊக்கம் அளிக்கப் படுகிறது. கடந்த ஆண்டில், 1.4 இலட்சம் பேருக்கும் அதிகமாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் இம் மாநிலத்தில் 22,000க்கும் அதிகமான சிறுதொழில்கள் தொடங்கப்பட்டன. மேம்படுத்தப் பட்ட தொழிற்சாலை திட்டங்களையும், தொழிற் கூடங்களையும் ஒதுக்குவதில், அரசு, பெண் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கிறது.



மைய அரசின் நிதி உதவியுடன் தொடங்கப் பட்டுள்ள மகளிருக்கான வணிகம் தொடர்பான தொழில் முனைப்பு உதவி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ். முதல் கட்டமாக சென்னையில் 5000 மகளிர் தெரிந்தெடுக்கப்படுவர்; அவர்களுக்கு அவசியமான நிருவாக மற்றும் தொழில் நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், தொண்டு நிறுவனங்கள் நிதி உதவியுடன் மகளிர் வணிகம் மற்றும் தொழில் தொடங்கவும் நிதி உதவி அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உணவு செயல்முறைப்படுத்துதல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், தோல் பொருட்களைத் தயாரித்தல் ஆகிய தொழில் பிரிவுகளை அமைக்க, தொடக்கத்தில் பயிற்சியும் நிதி உதவியும் அளிக்கப்படும். இந்நிதி உதவியில் 1/3 பாகம் மானியமாகவும், 2/3 பாகம் கடனாகவும் வழங்கப்படும். 21ஆம் நூற்றாண்டில், தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகிலேயே முன்னோடியாக விளங்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத்துறைக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இந்தியாவில் முதன்முதலாக சென்னையில் அமைக்கப்படும்.

இந்நிறுவனம் தொடக்கத்தில் பதிவுபெற்ற சுய நிதிச் சங்கமாகத் தொடங்கப்படும்; பின்னர், இது படிப்படியாக, சுயநிதிப் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்படும்.

**மின்சக்தித் துறை:**

1996-97ஆம் ஆண்டில் மின்சக்திப் பயன்பாடு 4.54 சதவீதம் அதிகரித்துள்ளது. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் தமிழ்நாட்டின் மின்சக்தித் தேவை 42,481 மில்லியன் யூனிட் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மின்சாரத்திற்கான தேவையை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி நிறைவு செய்வதே நமது முயற்சியாகும். பொதுத் துறையையும், தனியார் துறையையும் பங்குகொள்ளச் செய்வதன் மூலம் புதிய மின்சக்தித் திட்டங்கள் பலவற்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காற்று, கரும்புச் சக்கை, குப்பைக் கூளங்கள், நகராட்சிக் கழிவு, சூரிய ஒளி போன்ற பல்வேறு ஆதாரங்களிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தம் 9,273 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட பதினாறு மின் உற்பத்தித் திட்டங்கள் தனியார் துறையில் திட்டமிடப்பட்டு, அவை பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநில அரசு துறையில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

பெருங்குளம் எரிவாயு சுழலி, மின் உற்பத்தித் திட்டம் (30 மெகாவாட்).


கோவில் களப்பால் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் (30 மெகாவாட்).

தென் சென்னை அனல் மின் திட்டம் (2000 மெகாவாட்).

மத்திய அரசுத்துறை புதிய மின் திட்டங்களில், மாநில அரசின் பங்கு பின்வருமாறு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது :

(தொடர்ச்சி 49ஆம் பக்கம்)

எண்ணூரில் 7000 ஏக்கரில்
'பெட்ரோ கெமிகல் பூங்கா'
அமைக்கும்
தமிழ்நாடு அரசுக்கு
நல்வாழ்த்து!



ஹோட்டல் சேலம் கேஸ்டில்

ஏ4, பாரதி தெரு,
சொர்ணபுரி,
சேலம் - 636 004.

# தழைத்துவரும் தமிழ் வளர்ச்சி

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற அரசின் கொள்கையினைத் துரிதப்படுத்தும் வகையில், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைக்குத் தனியாக அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டது. தமிழ் ஆட்சிமொழி திட்டச் செயலாக்கத்தைத் தலைமைச் செயலகத்திலிருந்து தொடங்கும் வகையில், ரூ.50 இலட்சம் செலவில் 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டு, அனைத்துத் துறைகளுக்கும் வழங்கப்பட்டது. இதன்மூலம் தலைமைச் செயலகத்தில் (தமிழ் ஆட்சிமொழித் திட்ட செயலாக்கம்) 65 விழுக்காடு தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் இருக்கவேண்டும் என்ற இலக்கை எட்டியுள்ளது.

வணிக நிறுவனங்கள், கடைகள் முதலானவற்றின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதுவதற்கு ஏற்ப, 515 தமிழ்ச் சொற்கள் அடங்கிய சொற்பட்டியல் 5000 படிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

**பழங்காலத் தமிழ் இசைக்குப் புத்துயிர்!**

பழமையான சங்ககாலத்தைச் சேர்ந்த பாடல்களை இசை அமைத்துக் கற்பிப்பதன் மூலம், பழந்தமிழ் இசையைப் புத்தாக்கம் பெறச் செய்கிறோம். தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் சங்க காலத்தைச் சேர்ந்த பாடல்களான பரிபாடல், க்லித்தொகை ஆகிய பகுதிகளிலிருந்து பாடல்கள் இசை அமைத்துக் கற்பிக்கப்படுகின்றன.

சிலப்பதிகாரம், திருக்குறள், தேவாரம், திவ்யபிரபந்தம், திருவாசகம் முதலிய தமிழ்ப் பாடல்களைப் பண்களோடும், இசை அமைத்தும் கற்பிக்கப்படுகின்றன. பழந்தமிழ் வடிவங்கள் எனத் தேவாரம், திவ்யபிரபந்தம் முதலியவை பண்களோடு இருப்பதால் அவை மரபு வழுவாமல் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

கி.பி. முதல் நூற்றாண்டில் இயற்றப்பட்ட திருக்குறள் இரண்டடி உள்ள பாடல்கள் கருத்துவளம் மிக்கவை; அவற்றை இசையோடு கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் உள்ள ஆரிலய தாளிசைகள், களித்தாளிசைகள், பலவகை வரிப் பாடல்களை இசையோடு கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவையெல்லாம் பழந்தமிழ் இசை வடிவங்களே. இவற்றுக்கு இசை அமைத்துக் கற்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் காரைக்கால் அம்மையார் இயற்றிய பண் அமைந்த பதிகங்களை இசையுடன் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கி.பி. 7, 8ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் இயற்றிய தேவாரப் பாடல்கள் முறையோடு கற்பிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய இசை வடிவங்களை இசையுடன் சிறப்பாகக் கற்பிக்க மீள் பயிற்சி நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மறைமலை அடிகளாருக்கு மரியாதை!**

1997-98ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலவாகத் தமிழ் வானில் ஒளிவிட்டவரும், நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாப்புலவருமான செந்தமிழ் வித்தகர் - இனமான ஏந்தல் - தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதி வழங்கவும், ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்".

மறைமலை அடிகளாரின் வாரிசுதாரர்களுக்கு நிதியுதவி சமபங்காகப் பிரித்துப் பகிர்ந்தளிக்கப்படும். இதன் தொடர்பில் அவர் எழுதிய நூல்களின் பதிப்புரிமை, நூலுரிமை யாரிடம் உள்ளது - மற்றும் அன்னாருடைய சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

**திராவிடப் பல்கலைக் கழகம்:**

ஆந்திர மாநிலம், ஆர்.மா.குப்பம் என்ற இடத்தில் திராவிடப் பல்கலைக் கழகம் அமைக்க முதற்கட்டமாக ரூ.50 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம்) வழங்கப்பட்டது!

**சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட நிதியுதவி**

பிற மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழில் உள்ள சிறந்த இலக்கியங்களைப்

***"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலவாகத் தமிழ் வானில் ஒளிவிட்டவரும், நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாப்புலவருமான செந்தமிழ் வித்தகர் - இனமான ஏந்தல் தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதி வழங்கவும், ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்".***

பட்டதாரியில்லாக் குடும்பத்தில்
முதல் மதிப்பெண் பெறும்
மாணவர்க்கு,
அரசு செலவில், தொழிற்கல்வி
அளிக்க முன்வந்த
அரசுக்கு நல்வாழ்த்து!




பேராசிரியர் ரி. இராதாகிருஷ்ணன்
ஸ்ரீ கிருஷ்ணம்மாள் செக்யூரிட்டி சர்வீஸ்
&
ரியல் எஸ்டேட்,
48-1/6, இந்திரா நகர், நாகல் நகர்,
திண்டுக்கல் - 624 003.

பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட இத்திட்டம் வகை செய்கிறது. இதன்படி வெளியிடப்படும் நூல்களுக்கு ரூ.20,000 அல்லது அச்சிடும் செலவில் 60 சதவிகிதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்படும்.

1996-97ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நூல்கள் வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு ரூ.1,13,141 வழங்கப்பட்டுள்ளது!

**நிதியுதவி ரூ.400லிருந்து ரூ.500ஆக உயர்த்துதல்:**

அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், நலிந்த கலைஞர்கள் ஆகியோர் திங்கள்தோறும் பெற்று வந்த நிதியுதவி ரூ.400லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது!

**தமிழ்மொழிக் காவலர் நிதியுதவி:**

தமிழ்மொழிக் காவலர் நிதியுதவித் திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.400லிருந்து ரூ.500ஆக உயர்த்தி, பின்னர் ரூ.500லிருந்து ரூ.1500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

**தேவநேயப் பாவாணர் நூல்கள் நாட்டுடைமையாக்கல்:**

மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரது குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது.

**புதுதில்லி தமிழ்ச் சங்கத்திற்கு நல்கை:**

புதுதில்லி தமிழ்ச் சங்கத்தின் செயலாளர், அச்சங்கத்தில் கட்டப்பட்டுவரும் திருவள்ளுவர் கலையரங்கத்திற்குக் கூடுதல் வசதிகள் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டதற்கேற்ப தமிழக அரசு ரூ.10 இலட்சம் நல்கை வழங்கியுள்ளது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குக் கூடுதல் நல்கை:**

சென்னையில் இயங்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 25 ஆண்டுகளைக் கடந்து வெள்ளி விழாக் கொண்டாடுவதனைக் கருதிப் பார்த்து, இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகளுக்குக் கூடுதலாக ரூ.14.42 இலட்சம் சிறப்பு நல்கையாக அரசு வழங்கியுள்ளது.

**செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்:**

செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலித் திட்டத்தின்கீழ், உயிரெழுத்துக்கள் வரிசையில் 'அ' கரம் முதல் 'ஈ' காரம் வரையிலான முதல் மடலத்தின் இரு பகுதிகள் வெளியிடப்பெற்றுள்ளன. 'உ' கரம் முதல் 'ஔ' காரம் வரையிலான மூன்றாவது பகுதி விரைவில் வெளியிடப்படவுள்ளது.

பேரகரமுதலியின் எஞ்சிய மடலங்கள் வெளியீட்டுப் பணியை விரைவுப்படுத்தும் பொருட்டு, அகரமுதலித் துறையில் வல்லுநர்களாக விளங்கும் அறிஞர் பெருமக்கள் பதிப்பாசிரியர்களாகவும், உதவிப் பதிப்பாசிரியர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களின் துணையுடன் அகரமுதலித் திட்டத்தை ஐந்தாண்டுகளுக்குள் நிறைவுறுத்திட இலக்கு வரையறுக்கப்பட்டுப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

**திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி:**

திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளிக்கு, இதுவரையில் நல்கையாக ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகள் மேலும் சிறந்திட கூடுதல் அரசு நல்கையாக 1996-97ஆம் ஆண்டு ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.10 இலட்சம் அரசு நல்கை வழங்கியுள்ளது. மேலும் இந்நிறுவனத்தால் நடப்பு ஆண்டு ஜூன் திங்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ள சிறப்புக் கருத்தரங்கினை நடத்துவதற்கான செலவினங்களுக்கு நல்கை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்துமாக்கடல் நாடுகளின் கடலாய்வு குறித்து, அனைத்து நாடுகளின் முதல் கருத்தரங்கினை 1997ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் 22, 23ஆம் நாள்களில் சென்னையில் தொல்பொருள் ஆய்வுத்துறையும், கோவா தேசியக் கடலாய்வு நிறுவனத்தின் கடலாய்வுக் குழுவும் இணைந்து நடத்துவதற்காக அரசு ரூ.4 இலட்சம் நிதி வழங்கியது. சிறப்பாக நடைபெற்ற இம்மாநாடு பூம்புகார் ஆழ்கடலாய்வுப் பணியினை வலியுறுத்துவதாக அமைந்தது. இம் மாநாட்டினைத் தமிழகத்தில் நடத்தியதால், இம்மாநாட்டில் கலந்துகொண்ட பன்னாட்டு அறிஞர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும், தொழில்நுட்பங்களையும், பூம்புகார் கடல் அகழ்வாய்வில் பின்பற்ற வாய்ப்பாக அமைந்தது.

மேலும், பூம்புகார் கடல் அகழாய்வில் வெளிப்படுத்தி யிருக்கின்ற பொருட்கள் பற்றியும், அவற்றை வெளிக் கொணர்வது குறித்தும், பாதுகாப்பு முறை குறித்தும் கலந்துரையாடவும் மற்றும் பூம்புகாரின் பண்டைய சிறப்பு பற்றி வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் வருகை புரிந்த அறிஞர் பெருமக்கள் உணர்ந்துகொள்ளவும் இது ஏதுவாக இருந்தது.

சென்னை மற்றும் மதுரை அரசு இசைக் கல்லூரி கடம், கஞ்சிரா, மோர்சிங் துறைகளில் பயிலும் மாணவர்களுக்கு ரூ.100, நட்டுவாங்க வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு ரூ.150 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இக்கல்லூரிகளில் நாதஸ்வரம், தவில், கடம், கஞ்சிரா நுகர்சங்கம் மற்றும் நட்டுவாங்கத் துறையில் பயிலும் மாணாக்கர்களுக்கு உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.250 ஆக உயர்த்தி 1997-98ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும். ★

சட்டமன்ற உறுப்பினர்
தொகுதி மேம்பாட்டுத்
திட்டத்திற்கென ரூ.25 இலட்சம்
ஒதுக்கீடு செய்துள்ள
கலைஞர் அரசு வாழ்க!




பட்டு சரணாலயம்
ஸ்ரீசென்னியப்பா சில்க்ஸ்
எஸ்.கே.சி. டெக்ஸ்டைல்ஸ் காம்ப்ளக்ஸ்
திண்டுக்கல்.

# உயிர்ப்பிக்கப்பட்ட உள்ளாட்சிகள்

உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாயப்பு தமிழ்நாட்டிற்கு நெடுங் காலமாகக் கிடைக்காமல் இருந்தது. ஏனெனில், தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள் நீண்ட நாட்களாக நடத்தப்படாமலேயே போய்விட்டது. தற்போதைய அரசு 1996-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை உடடினயாக நடததுவதென்ற கொள்கை முடிவைத் திட்டவட்டமாக அறிவித்தது. அதன்படி, மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரததில் (கடந்த அக்டோபர்) திங்களில் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டன.

தேர்தல்களில் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு உரிய முறையில் இடஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 25.10.96 அன்று பதவி ஏற்றுக் கொண்டனர். பொறுப்பேற்ற அனைத்து ஊராட்சித்தலைவர்களுக்கும், வட்டார ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களுக்கு ஊராட்சி நிர்வாகத்தில் பரிச்சயம் பெறும்வகையில் அவர்களின் தலைமையிடங்களிலேயே முறையான பயிற்சிகள் தரப்பட்டன. இதனை அடுத்து, கடந்த நவம்பர் 30 மற்றும் டிசம்பர் 1-ஆம் தேதிகளில் சென்னையில் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில், ஊராட்சி ஒன்றியக் குழுவால் தொகுத்தளிக்கப்பட்டு, பரிந்துரைக்கப்பட்ட கோரிக்கைகள் மீது அரசால் தேவையான ஆணைகள் வெளியிடப்பட்டன.

உள்ளாட்சி அமைப்புகளுக்குப் படிப்படியாக அதிகப் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் வழங்க இவ்வரசு முன்வந்துள்ளது.




இதில் முதல்படியாக மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரையின் பேரில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், குடிநீர், பொதுப்பகிர்வு முறை, சாலைகள், சிறுபாலங்கள், போக்குவரத்துத் தொடர்பு, கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள், தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வேலைக் கல்வி, நூலகங்கள், ஊரக மின்மயமாக்கல் மற்றும் மரபு சாரா எரிசக்தி வளங்கள் ஆகிய ஒன்பது இனங்கள் மீதான திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைத்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

**தெருவிளக்குகள்:**

ஊராட்சிகளில், சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் பாதரச ஆவிவிளக்குகளைச் சேர்த்து மொத்தம் 9,27,074 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தெருவிளக்குகளைப் பராமரிக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்கட்டணத் தொகையைச் செலுத்தவும் அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ.3 கோடி நிதியுதவி அளிக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு அயற்பணி மூலம் அனுப்பப்பட்ட ஊழியர்கள், 1.8.96 முதல் திரும்பவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டதால், தற்போது தெருவிளக்குகள் பராமரிப்புப் பணியானது ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மின் வினைஞர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவைப்படும் தெருவிளக்கு உபகரணங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அனுமதிக்கப்பட்ட விலையில் வாங்க கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| நகராட்சி நிர்வாக இயக்குநர் | - | தலைவர் |
| ஊரக வளர்ச்சி இயக்குநர் | - | உறுப்பினர் |
| பேரூராட்சிகள் இயக்குநர் | - | உறுப்பினர் |
| முதன்மைப் பொறியாளர் தமிழ்நாடு மின் வாரியம் | - | உறுப்பினர் |

12.3.97 அன்று அமைச்சர் (ஊரக வளர்ச்சி) மற்றும் உள்ளாட்சி மற்றும் அமைச்சர் (சுகாதாரம் & மின்சாரம்) ஆகியோரின் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஊரகப் பகுதிகளில் மொத்தம் 19,072 தெரு விளக்குகள் அமைப்பதென முடிவு எடுக்கப்பட்டது.

**ஊரகக் குடிநீர் வழங்கல்:**

ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது 1.49 இலட்சம் கைப்பம்புகளும் 29,405 விசைப்பம்புகளும் செயல்பட்டு

உள்ளாட்சிகளுக்கு, ஒளியூட்ட
76 ஆயிரம் மின்விளக்குக்
கம்பங்கள் வழங்கிடும்
அரசுக்கு நல்வாழ்த்து!



சக்தி புட்ஸ்
16, கொங்களம்மன் கோயில் விதி
ஈரோடு-638 001.

வருகின்றன. இதனைப் பராமரிக்க அரசு ரூ.5.65 கோடி நிதியுதவி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு ஆண்டு தோறும் ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவைப் படும் குடிநீர் வழங்கல் பராமரிப்புப் பொருட்களை வாங்குவதற்கு அரசு, குழு ஒன்றினை ஏற்படுத் தியுள்ளது .பழுதுபட்ட குழாய்களை மாற்றி சீரிய முறையில் குடிநீர் வழங்குவதற்கு, 1996-97ல் அரசு ரூ.8 கோடியைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,500 ஆழ்துளைக் கிணறுகள் போடுவதெனத் திட்டமிடப்பட்டு, ஜூன் '96லிருந்து ஏப்ரல்'97 வரை 2,126 ஆழ்துளைக் கிணறுகள் முடிக்கப்பட்டுவிட்டன.



### உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்து அளிக்கக்கூடிய நிதி

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையினை ஆய்வு செய்யவும் மாநில அரசால் விதிக்கப்படுகின்ற வரிகளை மாநிலம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே பகிர்ந்து அளிப்பது பற்றிப் பரிந்துரைக்கவும் அத்தொகையினைப் பல்வகைப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமை மாற்றம் செய்யக்கூடிய அல்லது ஒதுக்கக்கூடிய வரிகள் மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கவும் 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அரசு மாநில நிதிக்குழுவினை அமைத்தது.

இக்குழு, தமது அறிக்கையினை 1996_ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ஆம் நாள் அன்று அளித்தது. மாநில நிதிக்குழு வரிகளை பொதுச்சேர்மம் ஏ (Pool A) மற்றும் சேர்மம் பி (Pool B) என்று இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளது. வரியின் மூல இருப்பிடத்தின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்று உரிமை மூலம் அளிக்கக்கூடிய முத்திரைத்தாள் மேல் வரி, உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல் வரி, மற்றும் கேளிக்கை வரிகள் அளிக்கக்கூடிய சேர்மம் ஏ-ல் சேரும். கேளிக்கை வரியைத் தவிர, இதர அனைத்து வரிகளும், பொதுச்சேர்மம் பி (Pool B) -ல் தொகுக்கப்பட்டு அதில் 8% உள்ளாட்சி அமைப்பு களுக்குப் பகிர்ந்தளிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

மாநில நிதிக்குழுவின் மேற்கண்ட பரிந்துரைகளை ஆய்வு செய்த பின்னர், 1997-98ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மேற்கண்ட பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளலாம் என அரசு அறிவித்தது. மேற்கண்ட 8% ஒதுக்கீட்டில் 15% சதவீதத்தினை சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக எடுத்து வைத்து அதனை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 60:40 எனும் விகிதத்தில் ஒதுக்கீடு செய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

பொதுச் சேர்மம் பி-ல் எஞ்சியுள்ளவற்றை (85 சதவீதம்) ஊரக மற்றும் நகர்ப்புற அமைப்புகளுக்கு 55:45 என்ற விகிதத்தில் ஒதுக்கப்படும்.

1997-98ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் பொதுச் சேர்மம் பி-ல் 8 சதவீதத் தொகையான ரூ.662 கோடியில் சமன்பாடு மற்றும் ஊக்க நிதிக்கு ரூ.99.3 கோடியும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.562.7 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 55 சதவீதம் - அதாவது ரூ.309.485 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1997-98ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட வேண்டும். இத்தொகையில் நான்கில் ஒரு பகுதியான ரூ.77.35 கோடியினை 10:45:45 என்ற விகிதத்தில் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கிடையே 1997-98ஆம் ஆண்டின் முதல் காலாண்டுத் தொகையாக ஒதுக்கீடு செய்துள்ளது.

இது குறித்த ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப் பட்டு விட்டன. மீதமுள்ள மூன்று காலாண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைகள் குறித்த ஆணைகள் உரிய நேரத்தில் வெளியிடப்படும்.

### ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்:


இத்திட்டம் ஊரக இளைஞர்களுக்குச் சில தொழில்களில் பயிற்சி அளித்து, அவர்கள் தாமே சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதற்கு உதவும் திட்டம் ஆகும்.

1996-97ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.619.24 இலட்சங்கள். மைய அரசும், மாநில அரசும் தங்கள் முதல் தவணைத் தொகையாக ரூ.154.805 இலட்சம், ரூ.131.505 இலட்சம் முறையே விடுவித்துள்ளன. இரண்டாம் தவணைத் தொகையாக மாநில அரசு 154.805 இலட்சம் விடுவித்துள்ளது. மைய அரசின் பங்குத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கும் மைய மாநில மற்றும் தனியார் சேவை நிறுவனங்களுக்கு அவைகளில் உள்ளமைப்பு வசதிகள் (Infrastructure) பெற்றுக்கொள்ள அரசு நிறுவனங்களுக்கு 100 விழுக்காடு உதவியும் மற்ற நிறுவனங்களுக்கு 50

பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக
ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு
செய்துள்ள
தமிழக அரசுக்கு எங்கள் வாழ்த்து!

ஜே.கே.ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட்
53ஏ, காலேஜ் ரோடு,
சுப்பிரமணியபுரம்,
காரைக்குடி 630 002



விழுக்காடு உதவியும் அளிக்கப்படுகிறது. 1996-97ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.1,91,60,000 தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

1996-97ஆம் நிதியாண்டில் இதுவரை இத்திட்டத்தில் 15,877 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். செலவழிக்கப் பட்ட தொகை ரூ.598.22 இலட்சம். பயிற்சி பெற்றபின் இவர்களுக்கு நவீன கருவிகள் அளிக்கப்படுகிறது.

## சுயவேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்கள்:

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP):

இத்திட்டம் மத்திய அரசின் 50 சதவிகித நிதியுடன் நம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஊரக மக்கள், அதாவது ரூ.11,000க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உடைய குடும்பம் ஒவ்வொன்றும் தமக்கென்று வருவாய் அளிக்கும் சொத்துக்களை உருவாக்கிக்கொள்ள அவர்களுக்கு மானியமும் வங்கிக்கடனும் வழங்கியுதவியதன் மூலம், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 1996-97 நிதியாண்டில் 51,550 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், 46,537 பெண்கள் மற்றும் 1,565 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர். இந்த நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.37.69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1997-98ஆம் நிதியாண்டில் இதுவரை 70,905 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 65,904 பெண்கள் மற்றும் 2,787 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

### ஊரகப் பகுதி வாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்:

நிலையான அடிப்படையில் சுய வேலை வாய்ப்பிற்குரிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம், ஊரகப் பகுதி வாழ் பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன், இத்திட்டமானது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ஒரு துணைத் திட்டமாக 1983-84ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் ரூ.25,200-ஐ சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. 1996–97ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 28 மாவட்டங்களில் 18,025 பெண்கள் பயன்பெறும் வகையில் 1,265 குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தது. 1997-98ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.2 கோடி மாநில அரசின் பங்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் இதுவரை 22,550 பெண்கள் பயன்பெறும் வகையில் 1,549 குழுக்கள் மார்ச் 97 வரை உருவாக்கப்பட்டுள்ளன.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்:


1997-98ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வோராண்டும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அதனை அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கிராமமாக அமைத்திடும் வகையில் இந்த நிதியாண்டு முதல் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்னும் கிராமப்புறத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாகச் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் நோக்கம், சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும், அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படை கட்டுமான வசதிகளான குடிநீர் வசதி, தொடக்கக்கல்வி, பொது சுகாதாரம், ஊட்டச்சத்து, குடியிருப்பு, கிராமச்சாலைகள் மற்றும் அவைகளின் இணைப்பு, நியாயவிலைக் கடைகள் ஆகியவற்றைப் பல்வேறு திட்டங்களிலிருந்து ஒருங்கிணைத்து, தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், செயல்படுத்தி ஒவ்வொரு கிராமமும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குமாறு அமைத்திடல் வேண்டும் என்பதாகும். கிராமத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்குவது, கழிவறை வசதி செய்துதருவது மற்றும் பள்ளிக்கூடங்களில் கழிவறை ஏற்படுத்துதல், தொடக்க சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் மருந்துகள் வழங்குதல் மற்றும் மருத்துவ வசதி அளித்தலுக்கு ஏற்ப எல்லா வசதிகளையும் வழங்குதல், தேவையாயின் சார்பு நிலை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைத்தல், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைப் பரவலாக்குதல் மற்றும் எய்ட்ஸ் ஆட்கொல்லி நோய் பரவுதலைத் தடுத்தல், மூன்று வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும்' சத்துணவு வழங்குதல், "ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு விளக்கு" திட்டத்தின் கீழ் எல்லாக் குடிசைகளுக்கும் மின் விளக்கு அளித்தல், எல்லா சாலைகளையும் தார் - கப்பி சாலையாக மேம்படுத்தல், நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்துதல், சமூக நலத்திட்டங்களான மூவலூர் இராமாமிர்த அம்மையார் திட்டம், முத்துலட்சுமி ரெட்டி திட்டம், ஆதரவற்ற வயோதிகர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் போன்ற திட்டங்களில் தகுதிவாய்ந்த அனைவரும் பயன்பெறச் செய்தல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்குப் பட்டா வழங்குதல் மற்றும் இடுகாட்டிற்கான பாதை வசதிகளைச் செய்தல், கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையினை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரத் தகுதியுள்ள நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ் கடன் வசதியினை விரிவாக்குவது, அடிப்படை ஆதார வசதிகளை தொலைபேசி மற்றும் துணை அஞ்சல் நிலையங்கள் ஏற்படுத்துதல், பூரண மதுவிலக்கு, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா ஒரு சேமிப்புக் கணக்கு துவக்க ஊக்குவித்தல் அனைத்து வீடுகளிலும் கழிவறை வசதி, மரம் நடுதலை சேவை மனப்பான்மையுடன் ஊக்குவித்தல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த செயலாக்கத் திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருங்கிணைப்புக்

நெடுஞ்சாலை மேம்பாட்டுக்கு
ரூ.250 கோடி வழங்கிடும்
தமிழ்நாடு அரசை
நெஞ்சார வாழ்த்துகிறோம்!

சூர்யா ஸ்கிரீன் ஆர்ட்ஸ்
ஈரோடு - 1.



குழு ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் செயல்படும். இத்திட்டத்தின் ஊரக வளர்ச்சி இயக்குநர் கண்காணிப்பாளராகச் செயல்படுவார். அரசு நிலையில் ஊரக வளர்ச்சித் துறையும் கண்காணிக்கும். இத்திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மார்ச் 1998 இறுதிக்கு முன் முழுமையாக முடிக்கப்பெறும்.

**வேலை உறுதியளிப்புத் திட்டம்:**

வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டம் மைய அரசினால் 1.10.93 முதல் துவங்கப்பட்டது. இத்திட்டத்திற்குத் தேவையான நிதி ஆதாரத்தை மைய அரசும் மாநில அரசும் முறையே 80:20 என்ற விகிதத்தில் பங்கு ஏற்கின்றன. இத்திட்டத்தின்படி, கிராமத்தில் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 2 நபர்களுக்கு விவசாய வேலைகள் இல்லாத காலங்களில் வட்டார எல்லைக்குள் ஆண்டு ஒன்றுக்கு 100 நாட்களுக்கு வேலை அளிப்பது ஆகும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 18 வயதிற்கு மேற்பட்டும் 60 வயதிற்குள்ளாகவும் ஆண் மற்றும் பெண் இருபாலரும் தங்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டி கிராமப்பஞ்சாயத்து அலுவலகத்தில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம். அவர்களுக்கு இத்திட்டத்திற்கான குடும்ப அட்டைகள் வழங்கப்படும். 1.1.96 முதல் இத்திட்டத்துடன் தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் இணைக்கப்பட்டதால், இத்திட்டம் 20 மாவட்டங்களில் 198 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1996-97ஆம் ஆண்டில் இத்திட்டம், தமிழ் நாட்டிலுள்ள 384 வட்டாரங்களில்-287 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டில் மைய அரசு தனது பங்காக மொத்தம் ரூ.14,515 இலட்சம் விடுவித்துள்ளது. இதையடுத்து மாநில அரசின் பங்காக (20%) மொத்தம் ரூ.3,628.75 இலட்சம் அனுமதித்துள்ளது. ஆக, மைய மற்றும் மாநில அரசுகள் அனுமதித்துள்ள மொத்தத் தொகை ரூ.18,143.75 இலட்சமாகும்.

இத்திட்டம் செயல்படுத்தப்படாத மீதமுள்ள 103 வட்டாரங்களில் 1997-98ஆம் ஆண்டில் விரிவுபடுத்த தற்போது மைய அரசு தமது ஒப்புதலை வழங்கியுள்ளது. எனவே, தமிழ் நாட்டிலுள்ள எல்லா 384 வட்டாரங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப் படவுள்ளது.

<u>1996-97ஆம் ஆண்டில் திட்டம் செயலாக்க விவரம்:</u>

| | | (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. அ. பதிவு செய்யப்பட்ட நபர்கள் | : | 11.178 |
| ஆ. வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது | : | 468.424 (இலட்ச மனிதநாட்கள்) |
| இ.மொத்தம் முடிக்கப்பட்ட பணிகள் | : | 23,970 |
| ஈ. செயலாக்கத்தில் உள்ள பணிகள் | : | 8,526 |
| உ) மொத்தச் செலவு | | 17,914.19 (ரூ. இலட்சத்தில்) |

<u>2. வேலை வாய்ப்புச் செயல்பாடு</u>

| | | (இலட்சத்தில் மனித நாட்கள்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் | : | 212.999 |
| மலைவாழ் மக்கள் | : | 25.464 |
| ஏனையோர் | : | 229.961 |
| மொத்தம் | : | 468.424 |

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1996-97ஆம் ஆண்டில் சாதனைகள்**

1. கடந்த சில ஆண்டுகளாக, பல்வேறு குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பு உள்ளாட்சி அமைப்புகளால் போதுமான நிதி வசதியின்மையாலும், போதுமான தொழில்நுட்ப அனுபவமின்மையாலும் தகுந்த கவனம் செலுத்தப்படவில்லை. இதன் காரணமாகப் பலகோடி ரூபாய் மதிப்பிற்கு உருவாக்கப்பட்ட உடைமைகள் சரிவர உபயோகப்படுத்தப்படவில்லை.


இந்த அரசு பதவி ஏற்றவுடன், குடிநீர்த் திட்டங்களைப் புனரமைப்புச் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, 1996-97ஆம் ஆண்டில், சுமார் ரூ.52 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்களைப் பெருமளவில் புனரமைப்புச் செய்யும் பணியினை உடனடியாக மேற்கொண்டது. இப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் புனரமைப்புத் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நான்கே மாதங்களில் முடிக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டது. இதனால் 3,100 தனி விசைப்பம்பு திட்டங்களும் 225 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், ரூ.39 கோடி செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதால், பல ஆண்டுகளாகச் செயல்படாமல் இருந்துவந்த குடிநீர்த் திட்டங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்ததோடு மட்டு மல்லாமல், இக்குடியிருப்புகளின் குடிநீர் விநியோக அளவும் பெருமளவு அதிகரிக்கப்பட்டது.

இதே அடிப்படையில், நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் புனரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

உருவாக்கப்பட்ட அனைத்து உடைமைகள் பயன்களும் அதன் முழுப் பயனை மக்களுக்குத் தரும் வகையில், வரும் ஆண்டுகளிலும் இதுபோன்ற புனரமைப்புத் திட்டங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்
தர்மபுரி.

பிற்படுத்தப்பட்டோர்'
மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு
இலவச வீட்டு மனைக்கு
ரூ.15 கோடி அளிக்கும்
அரசை வாழ்த்தி மகிழ்கிறோம்!



**ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதலில் சாதனைகள்:**

1996-97ஆம் ஆண்டில், புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுடன், ஊரகக் குடிநீர்த் திட்டம் மற்றும் சிறப்புக் குடிநீர்த் திட்டங்கள் வாயிலாக, கீழ்க்கண்ட பிரிவுகளின் கீழ், ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணியும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டது.

அ. ஊரகக் குடிநீர்த் திட்டம் : 1600 குடியிருப்புகள்

ஆ. குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல் : 49 குடியிருப்புகள்

இ. புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு களுக்குக் குடிநீர் வழங்கல் : 70 குடியிருப்புகள்

ஈ. உவர்நீரை நன்னீராக்கும் திட்டம் : 4 கலன்கள்

உ. ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புப் பகுதித் திட்டம் (ஊரகக் குடிநீர் திட்டத்தின் பகுதியாக) : 844 குடியிருப்புகள்

**நகரப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதலில் சாதனைகள்**

1996-97ஆம் ஆண்டில், 3 நகராட்சிகளுக்கும், 8 நகரப் பேரூராட்சிகளுக்கும் மற்றும் 16 ஊரகப் பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வசதியளிக்கப்பட்டது.

**குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அதிகாரப் பகிர்வு:**

முந்தைய அரசின் ஆணைப்படி, மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் இவற்றால் எந்த ஒரு வேலைக்கும், உபகரணங்கள் மற்றும் பொருட்களை வாங்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்தப் புள்ளிகளைப் பொருத்தவரையில் ஒப்பந்தத்தின் மதிப்பு ரூ.1 கோடிக்கு அதிகமாக இருந்தால், அரசின் ஒப்புதல் முன்னமே பெறப்பட வேண்டும். இத்தகைய ஆணையால் பொருட்களை வாங்குவதிலும் வேலைகளை முடிப்பதிலும் பெரும் காலதாமதம் ஏற்பட்டது. இந்த அரசு கடந்த 1996ஆம் ஆண்டு மே மாதம் பதவி ஏற்றபின், முந்தைய அரசின் இந்த ஆணையை ரத்து செய்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கே இதற்கான அதிகாரத்தை அளித்தது. இந்த ஆணையால் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதால் ஏற்படும் காலதாமதம் அறவே அகற்றப்பட்டது மட்டுமல்லாது பொருட்களை உடனடியாக வாங்குவதற்கு வழிகோலியது.

**கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்குவதற்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அதிகரித்தல்:**

இதுநாள்வரை இருந்துவந்த விதிகளின்படி எந்த ஒரு ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கும் அதன் நபர் ஒன்றுக்கான செலவு ரூ.1000க்கு அதிகமாக இல்லாமல் மற்றும் 1000 லிட்டருக்கான செலவு ரூ.10க்கு அதிகமாக இல்லாமலும் இருந்தால் வாரியமே அத்தகைய குடிநீர்த் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கலாம்.

தளவாடங்களின் விலை உயர்வாலும், வேலை யாட்களின் செலவின உயர்வாலும் மற்றும் தகுந்த நீராதாரங்களைத் தொலைதூரத்தில் கண்டுபிடிக்க வேண்டி இருப்பதாலும், குடிநீர்த் திட்டங்களின் மதிப்பீட்டுத்தொகை முன்னமே நிர்ணயிக்கப்பட்ட வரையறையை விட அதிகப்படுவதால் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

இதனால் நிர்வாக ஒப்புதல் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாகக் காலக் கெடுவுடன் முடிக்கப்பட வேண்டிய திட்டங்களுக்கு வேண்டிய நிதியைக் குறித்த காலத்தில் பெற்று, திட்டங்களை நிறைவேற்றுவது இயலாததாயிற்று.

தற்போது அரசு ஊரகக் குடிநீர்த் திட்டங்களின் நபர் ஒன்றுக்கான செலவின் மதிப்பு முந்தைய வரையறையிலான ரூ.1000க்கு பதிலாக ரூ.2500 வரையிலும், 1000 லிட்டருக்கான செலவின மதிப்பு முந்தைய வரையிலான ரூ.10க்கு பதிலாக ரூ.17 வரையிலும் வாரியமே நிர்வாக ஒப்புதல் வழங்கலாம் என உத்தரவு வழங்கியுள்ளது. இவ்வாறு வரையறை உயர்த்தப்பட்டதால் வாரியமே நிர்வாக ஒப்புதல் அளிக்க ஏதுவாக்கப்பட்டு அரசிடமே இருந்து நிர்வாக ஒப்புதல் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்பட்டது.



ஏழைப் பெண்கள்
திருமண உதவியை
ரூ.10,000 என
உயர்த்திய அரசுக்கு
உளமார்ந்த வாழ்த்துகள்!



ஆர்த்தி திரையரங்கம்
15ஏ, பழைய திருச்சி ரோடு
திண்டுக்கல்-624 001.


&

மீன் பிளாஸ்டிக் டிசைனர்ஸ்
4/14 சப் கலெக்டர் ஆபீஸ் ரோடு
திண்டுக்கல்.

வாரியத்தில் கடந்த 11.10.1996லிருந்து தர உத்தரவாத விழிப்புணர்வுக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதால் நீண்ட நாட்களாகப் பயனுக்குக் கொண்டு வரப்படாத சில குடிநீர்த் திட்டங்களின் பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டன. இக்குழுவினரால் மேற்கொள்ளப்படும் திடீர் ஆய்வினால் தளவாடச் சாமான்கள் மற்றும் மேற்கொள்ளப்படும் வேலைகளின் பணிகளின் தரத்தில் மேம்பாடு காணப்பட்டது.

**புதிய ஆழ்துளையிடும் இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்புதல்:**

வாரியத்தில் தற்போதுள்ள ஆழ்துளையிடும் இயந்திரங்கள் நீண்ட காலத்திற்கு முன் வாங்கப் பட்டதால், இவற்றின் வேலைத்திறன் நல்ல நிலையில் இல்லை. அதனால் இவற்றை முழுமையாக உபயோகப் படுத்த முடியவில்லை. அரசு, ஆழ்துளையிடும் இயந்திரங்களின் தேவையின் அவசியத்தை உணர்ந்து உபயோகப்படுத்தமுடியாத பழைய இயந்திரங்களுக்குப் பதிலாகவும், துளையிடும் இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் கடினப் பாறையில் துளையிடக்கூடிய 12 புதிய இயந்திரங்களையும் படிவப் பாறையில் துளையிடக்கூடிய '10' புதிய இயந்திரங்களையும் வாங்குவதற்காக ஒப்புதல் அளித்துள்ளது.



**புதிய வாகனங்கள் வாங்குதல்:**

முந்தைய அரசின் ஆணைப்படி உபயோகிக்க முடியாத பழைய ஈப்புகளுக்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வாங்குவது 2:1 என்ற விகிதாச்சாரத்தில் இருந்தது. தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள பெரும்பாலான ஈப்புகள் பல ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவை. இதில் பெரும்பாலானவை உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளன. ஈப்புகளின் இருப்பு குறைவாக உள்ளதால் திட்டங்களை நிறைவேற்றுவதில் - குறிப்பாக மூலை முடுக்குகளில் உள்ள ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதில் களப் பொறியாளர்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாகிறார்கள். இந்த அரசு இந்தக் குறைபாடுகளை உணர்ந்து புதிய ஈப்புகளை வாங்குவது தொடர்பான முந்தைய அரசு ஆணையை மாற்றம் செய்து உபயோகிக்க முடியாத பழைய வாகனங்கட்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வாங்குவதற்கு 1:1 என்ற புதிய விகிதாச்சாரத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**ரூ.10 கோடிக்கு உட்பட்ட திட்டங்களை வாரியமே செயல்படுத்துதல்:**

1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) வகை முறைகளின்படி, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியமானது, சென்னைப் பெருநகரப் பரப்பிடம் நீங்கலாக, தமிழ்நாட்டில் நீர் வழங்குதல் மற்றும் வடிகால் திட்டங்கள் அனைத்தையும் அரசின் நிருவாக ஒப்புதலைப் பெற்றதற்குப் பின்னர் நிறைவேற்றுகின்றது. பத்துக்கோடி ரூபாய்கள் மற்றும் அதற்குக் குறைவானதாக ஆகும் செலவினத்தைக் கொண்ட பணிகளை வாரியத்தின் ஒப்புதலளிப்புடன் நிறைவேற்றுவதற்குத் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தை அனுமதிப்பதெனக் கருதப் பட்டுள்ளது. இதனால், அத்தகைய செயல் திட்டங்களுக்கு அரசின் ஒப்புதலளிப்பினைப் பெறுவதில் ஏற்படும் கால தாமதமானது தவிர்க்கப் படுகிறது. மதுரை, கோயம் புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் மாநகராட்சிகள் மற்றும் நடைமுறையிலுள்ள எந்த ஒரு சட்டத்தின்படியோ அமைக்கப்படும் மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை நகராட்சிகள் ஆகியன வாரியத்தின் அனுமதியின்றி எல்லாவிதமான திட்டங்களையும் ஆய்வுசெய்ய, தயாரிக்க, நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் -கையினால் இயங்கக்கூடிய நீரேற்றுக் குழாய், நீர்க்குழாய்த் தட அமைப்பினை விரிவாக்குதல், நீரேற்று விசைக்குழாய் அமைப்பதன் மூலமாகத் தற்போது இருந்துவருகின்ற நீர்வளங்களை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதிப்பதெனவும்கூட கருதப்பட்டுள்ளது.

அதற்கிணங்கியவகையில் 4/1971 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தினைத் தக்கவாறு திருத்த சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, நடந்து முடிந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கான சட்டத்திருத்தங்கள் விரைவில் அரசு இதழில் வெளியிடப்பட உள்ளது.

**மக்கள் நலப்பணியாளர்கள் திட்டம்**

1996-97ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது, 1989-90ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த மக்கள் நலப் பணியாளர்கள் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும் எனவும் - இதன் மூலம் மாதம் ரூ.500 மதிப்பூதியம் பெறும் வகையில் 25,000 கிராமப்புற

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்.

1989-91ல் நடைமுறையிலிருந்த மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம் 13.7.91 முதல் கைவிடப்பட்டது.

கிராமங்களில் முதியோர் கல்வித் திட்டங்கள், நூலகங்கள் நடத்துதல், கிராமப் பொதுச் சொத்துக்கள் பேணிக் காத்திடத் துணை புரிதல், சிறுசேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் மற்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளைப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல் போன்ற பணிகளைச் செயற்படுத்துவதன் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். அரசாணை (நிலை) எண்:50. ஊரக வளர்ச்சித்துறை, நாள்:24.2.97ல் 25,000 மக்கள் நலப் பணியாளர்கள் பணியிடம் தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**ஆனைமலை, மலைவாழ் மக்களின் ஒருங்கிணைந்த இந்திராகாந்தி வனவிலங்குப் பாதுகாப்புத் திட்டம்:**

சிறப்பு மற்றும் புதிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை மலைவாழ் மக்களுக்கான ஒருங்கிணைந்த இந்திராகாந்தி வனவிலங்குப் பாதுகாப்புத் திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.132 இலட்சம் ஒதுக்கியிருந்தது. இத்திட்டம் செயல்படுவதற்காக மாநில அரசு தனது இணை பங்கான ரூ.33 இலட்சம் ஒதுக்கி ஆணை வெளியிட்டுள்ளது.

**ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்:**

1989 ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளிலிருந்து இத்திட்டம் செயலாக்கம் பெறுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதியுடையவர் ஆவர். இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. 30 விழுக்காடு பெண்களுக்காக வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த செலவில் 80 விழுக்காடு மத்திய அரசும், 20 விழுக்காடு மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. ஊரக ஏழை மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஒரு மாவட்டத்திற்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு அம் மாவட்டத்தில் உள்ள சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஊராட்சிக்கு 65:15:20 விழுக்காடு என்ற வீதத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு ரூ.5,806.53 இலட்சங்கள் 1996-97ஆம் நிதியாண்டுக்கு நிதி விடுவித்தது. இதற்கு இணையாக மாநில அரசும் தனது பங்கான ரூ.1,451.633 இலட்சங்களை விடுவித்தது.

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டங்கள்:**


இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் 1.1.96 முதல் தனித் திட்டமாகச் செயலாக்கம் பெறுகிறது.

இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஊரகப் பகுதியில் உள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழ் நிலையில் உள்ள ஆதி திராவிடர்/பழங்குடினருக்கும் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் இலவசமாக 20 சதுர மீட்டர் பரப்புள்ள வீடு கட்டித் தருவதாகும். மேலும் மிகவும் வறிய நிலையில் உள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினத்தவர் அல்லாதவர்களுக்கும் வீடுகள் கட்டித்தரப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு ரூ.4,009.44 இலட்சங்கள் 1996-97ஆம் நிதியாண்டுக்கு நிதி விடுவித்தது. இதற்கு இணையாக மாநில அரசும் தனது பங்காக ரூ.1002.355 இலட்சங்கள் விடுவித்தது.

வெள்ளத்தின் காரணமாகப்பாதிக்கப்பட்ட விழுப்புரம்





இராம்சாமி படையாட்சியார், தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம், நாகை காயிதே மில்லத், தஞ்சாவூர், திருவண்ணாமலை சம்புவராயர், அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர் ஆகிய 7 மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஆதி திராவிடர் மக்கள் பலர் வீடுகளை இழந்ததால், மேற்கண்ட 7 மாவட்டங்களுக்கும் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 10,000 வீடுகள் கட்ட கூடுதல் நிதியாக ரூ.16 கோடி மத்திய அரசைக் கேட்டதற்கு, மத்திய அரசு இதற்காக ரூ.5 கோடி ஒதுக்கி உள்ளதாகத் தகவல் அனுப்பியுள்ளது.

இத்தொகையை வைத்து, 3,125 தொகுப்பு வீடுகள் கட்ட உத்தேசித்துள்ளது. இதில் மாநில அரசின் பங்கு 1.25 கோடியாகும்.

**தொகுப்பு வீடுகள்:**

9.1.1996 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசாணை நிலை எண்.5ல், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்/ ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் - ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட பழுதடைந்த வீடுகளைப் பழுது பார்ப்பதற்கு ரூ.15 கோடி ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 11.3.97 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசாணை எண்.45ல் 1989-90க்கு முன்னர் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்/ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட தற்போது குடியிருக்கத் தகுதியற்ற நிலையிலுள்ள ஆதி திராவிடர்களின் தொகுப்பு வீடுகளுக்குப் பதிலாகப் புதியதாக 5,555 வீடுகள் கட்டி அதே பயனாளிகளுக்குக் கொடுக்க, மேலும் ரூ.15 கோடி ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரிசியைத் தூவினேன்;
இதுவும் ஒரு பாவம்தான்!
கோழிகளுக்குள் சண்டை!

- ஐசா/ஜப்பான் ஹைக்கூ

மேற்சொன்ன 30 கோடி ரூபாயை ஊரக வளர்ச்சி இயக்குநர் 28 மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளார். இப்பணிகளைப் பயனாளிகளே செயற்படுத்துவதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும்.

**மில்லியன் கிணறுகள் திட்டம்:**

மில்லியன் கிணறுகள் திட்டம் 1.1.1996 முதல் தனித்திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

ஏழ்மை நிலையிலுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப் பட்டோருக்கும் திறந்த வெளிப்பாசனக் கிணறுகள் அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டத்தின் கீழ், மத்திய அரசு 1996-97ஆம் ஆண்டு நிதியாண்டுக்கு இதுவரை ரூ.1197.68 இலட்சம் நிதி விடுவித்தது. அதற்கு இணையாக மாநில அரசும் தனது பங்கான ரூ.299.42 இலட்சங்களை விடுவித்தது.

இத்திட்டத்தின் கீழ் பாசனக் கிணறுகளுக்கு மற்றும் குழாய்க் கிணறுகளுக்கும் (Open Wells and Tube Wells) மின் இணைப்பு வழங்குவதில் ஆதிதிராவிடர்/ பழங்குடி இனத்தைச் சேராத பயனாளிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை அளிக்க ஆண்டுதோறும் தனியாக 1000 மின் இணைப்பு இலக்கு என்ற அடிப்படையில் வழங்க வேண்டும் என அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ★

சிங்கிள் டெண்டர் முறை அகற்றி
பொது டெண்டர்
நடைமுறைப்படுத்திய
நல்லாட்சிக்கு எம் வாழ்த்து!




என்.பார்வதி பட்டு சென்டர்
140, கிழக்கு ரத விதி, திண்டுக்கல்-1.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ், தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் ஏற்பட்டுள்ளதுபோல் கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம் மற்றும் பால்வளத் துறைகளிலும் பல மக்கள் நலத்திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் நலன் பேணுவதைப்போல் கால்நடைகளின் நலன் பேணுவதிலும் கலைஞரின் அரசு சளைத்தது அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் பல திட்டங்கள் கடந்த ஓராண்டு காலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## கால்நடை பராமரிப்புத் துறை

கால்நடைகளின் சுகாதாரம், நோய்த்தடுப்பு மற்றும் பராமரிப்பினைக் கருத்தில் கொண்டும், ஏழை விவசாயிகளின் நலன் கருதியும் கால்நடைகளுக்குப் போதிய வைத்திய வசதி ஏற்படுத்தும் பொருட்டு 1996-97ஆம் ஆண்டு 10 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் மருத்துவமனைகளாக உயர்த்தப் பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில் மேலும் 20 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாக உயர்த்துவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதேபோல் 1996-97ஆம் ஆண்டு 10 புதிய கால்நடை மருந்தகங்கள் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ளன. 1997-98ஆம் ஆண்டில் மேலும் 60 இடங்களில் புதிதாகக் கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் நலன் கருதி, பிராணிகளுக்குக் குடற்புழு நீக்கல் (Deworming) சம்பந்தமாக முந்தைய அரசால் வசூலிக்கப்பட்ட கட்டணம் ரத்து செய்யப்பட்டு, குடற்புழு நீக்கம் இப்பொழுது எந்தவிதக் கட்டணமும் இன்றி இலவசமாக நிறைவேற்றப்படுகிறது. இதே போல் வளர்ப்புப் பிராணிகளின் (Pet Animals) சிகிச்சைக்காக முந்தைய அரசால் வசூலிக்கப்பட்ட மருத்துவக் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. தொலைதூரக் கிராமங்களுக்கு உறைவிந்து எடுத்துச்செல்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில்கொண்டு, அத்தகைய கிராமங்களுக்கு 300 பொலிகாளைகளை ரூ.15 இலட்சம் செலவில் இலவசமாகக் கொடுத்து அந்தக் கிராம மக்கள் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தஞ்சை காயிதேமில்லத், திருவாரூர் ஏ.டி.பன்னீர் செல்வம், திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டங்களில் உபரியாக உள்ள வைக்கோலை ஊட்டச் சத்தாக மாற்ற 1000 செயல்விளக்கப் பயிற்சிப் பண்ணைகள் ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

இத்துறையில் 1997-98லும் கீழ்க்கண்ட ஆக்கப் பணிகளைச் சீரிய முறையில் செயல்படுத்தத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன:

"டேனிடா' உதவியுடன் நடைபெறும் கால்நடை வளர்ப்புத் திட்டம், புதுக்கோட்டை மாவட்டம், இராம்நாதபுரம் மாவட்டம், காமராஜர் மாவட்டம், வ.உ.சிதம்பரனார் மாவட்டம் ஆகிய 5 மாவட்டங்களில் 27.48 கோடி ரூபாய் செலவில் ஏழு ஆண்டுகளுக்குச் செயல்படும்.

கரூர், திருவாரூர், உதகமண்டலம் ஆகிய மூன்று மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளைப் பெரு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

2,126 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளின் கால்நடை உபகிளை நிலையங்கள் பணி புரிய ரூ.42.5 இலட்சம் செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

கால்நடை பராமரிப்புத் துறைப் பண்ணைகளில் தினக்கூலிகளாக 10 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகளாகத் தற்காலிகமாகப் பணியாற்றி வந்தவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் 834 நபர்கள் பணி நிரந்தரம் பெறுவர்.

அயல்நாட்டு நிதி உதவியுடன் பல மேம்பாட்டுத் திட்டங்களும் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. உலக வங்கித் திட்டத்தின் கீழ், நாட்டின் கால்நடைகளின் தரத்தினை உயர்த்தவும், பால் உற்பத்தியினைப் பெருக்கவும், உயரினப் பொலிகாளைகளின் உறைவிந்து 3510 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் மூலம் கிராமங்கள் மற்றும் நகர்ப் புறங்களில் வழங்கப்படுகின்றன. உறை விந்தினைப் பாதுகாக்க 906 உறைவிந்துக் குடுவைகள் ரூ.144.86 இலட்சம் செலவில் பல்வேறு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அலுவலகப் பணியமைப்பிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எல்லாப் பணிகளுக்கும் பட்டியல் தயார் செய்யப்பட்டு உயர்பதவிகள் நிரப்பப் பட்டுள்ளன.

## கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

ஆசியாவிலேயே முதன்முதலாகக் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தினை நிறுவிய பெருமை மாண்புமிகு தமிக முதல்வரைத்தான் சாரும். கலைஞர் ஆணையின்பேரில், 1989ஆம் ஆண்டில் இப்பல்கலைக்

**கால்நடை பராமரிப்பு-**
**மீன் வளம்-**
**பால் வளம்**

மீனவர்க்கு 4,000
இலவச வீடுகள் அளிக்கும்
எங்கள் அரசுக்கு
இதய வாழ்த்து!



ஸ்ரீ கந்தவிலாஸ் விபூதி ஸ்டோர்
34, அடிவாரம், பழனி.

கழகம் ஆரம்பிக்கப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டுவருகிறது. பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு இப் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டுதோறும் பல இலட்ச ரூபாய்கள் அரசால் வழங்கப்படுகிறது.

1996-97ஆம் ஆண்டில் ரூ.1870.95 இலட்சம் வழங்கப்பட்டது. 1997-98ஆம் ஆண்டு 1929.73 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவியர்களின் துயர் துடைக்கும் வகையில் மீன்வளக் கல்லூரி - ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி கால்நடை மருத்துவக் கல்லூரி - ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் ஆகிய இரண்டு கல்லூரிகளில் மாணவியர்களுக்கு விடுதி கட்டப்பட்டு வருகிறது.

இதற்காக அரசு ரூ.35 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

## மீன்துறை

மீன்துறையிலும் கடந்த ஓராண்டு காலத்தில் மீனவர்களின் ஒருங்கிணைந்த சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கும் மீன்வள அபிவிருத்திக்கும் பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றியுள்ளது. அவற்றுள் சில வருமாறு:

## மீனவர் நலத்திட்டங்கள்:

### ம. சிங்காரவேலர் நினைவு இலவச வீட்டு வசதித் திட்டம்:


மீனவர் சமுதாயத்திலே பிறந்து, மீனவர்களுக்காக உழைத்த திரு ம. சிங்காரவேலர் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில் 1996-97 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் மின்சார இணைப்புடன் கூடிய 4,000 வீடுகள் வீதம், 20,000 வீடுகள் கட்டி இலவசமாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீடு கட்டுவதற்கும் ரூ.32,000/ செலவிட அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இதற்காக 1996-97ஆம் நிதியாண்டில் ரூ.11.80 கோடியும் 1997-98ஆம் நிதியாண்டிற்கு ரூ.12.80 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### மீனவர் வீடுகளைப் பராமரிக்கும் திட்டம்:

1975-76 முதல் ஏற்கெனவே இலவசமாக வழங்கப்பட்ட வீடுகளை ஏழ்மையின் காரணமாகப் பராமரிக்க இயலாத காரணத்தால் ஒரு பழுதடைந்த வீட்டிற்கு ரூ.5,000 வரை மான்யமாக ஒரு கோடி ரூபாய்க்கு 1996-97ல் ஒப்பளிப்பு அளித்து இத் திட்டத்தினை 1997-98லும் தொடர்ந்து செயலாக்கப்படுகிறது.

### உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம்:

தமிழகத்தில் முதல் முறையாக உள்நாட்டு மீனவர்களுக்கு ரூ.1.35 கோடி செலவில் 1997-98 ஆண்டில் 500 வீடுகள் கட்டிக்கொடுக்க ஜவகர்



ரோஸ்கர் திட்டத்துடன் இணைந்து செயல்பட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### மீனவர் கிராமங்களில் தெருவிளக்குப் பொருத்துதல்:

பெரும்பாலும் மீனவ கிராமங்கள் ஊராட்சி எல்லைப் பகுதியில் தனியாக இருப்பதால் அப்பகுதியில் போதுமான தெருவிளக்கு வசதிகள் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு 1996-97இல் 158 மீனவர் கிராமங்களில் ரூ.50 இலட்சம் செலவில் 1250 தெரு விளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 1997-98லும் இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ், அரசே முழு பிரிமியமும் செலுத்தி, இதுவரை மீனவர்கள் விபத்தில் இறந்தாலும் முழு ஊனமுற்றாலும் ரூ.25,000ம், பகுதி ஊனம் அடைந்தால் ரூ.12,500ம் நிவாரணத் தொகையாக வழங்கி வந்தது.

1996-97ஆம் ஆண்டு 25.3.97 முதல் இந்த நிவாரணத் தொகை ரூ.50,000க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

### ஒருங்கிணைந்த கடன் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்:

ஒருங்கிணைந்த கடன் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தில் முதல் கட்ட திட்டத்திற்கு 1996-97இல் ரூ.165.60 இலட்சம் வழங்கப்பட்டது. 1997-98ஆம் நிதியாண்டில் ரூ.177.729 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

இரண்டாவது கட்டமாக (II Phase) இத்திட்டத்தின் கீழ், மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன்பிடி கலன்கள்



வழங்குவதற்கு ரூ.48 கோடி தேசிய கூட்டுறவு நிதியுதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அனைத்துக் கடலோர மாவட்டங்களில் 100 மீனவர் கிராமங்களைச் சேர்ந்த 16,350 பாரம்பரிய மீனவர்கள் பயனடைவர்.

### மீனவர்களுக்குத் தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்குதல்:

இயற்கை இடர்ப்பாடுகளால் திசைமாறிச் செல்லும்போது பாதுகாப்பாகக் கரை சேருவதற்கு ஏதுவாக 25% மான்ய விலையில் தகவல் தொடர்புச் சாதனங்கள் வழங்க 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கரையோரத் தகவல் தொடர்பு நிலையங்கள்:

மீன்பிடிக்கச் செல்லும் விசைப்படகுகள் கரையுடன் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக சின்னமுட்டம் மற்றும் கடலூரில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.8.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நாட்டுப் படகுகளில் பொருத்தப்படும் இயந்திரங்களுக்கு மான்யம் வழங்கும் திட்டம்:

இத்திட்டத்திற்காக 1996-97இல் இயந்திரத்தின் விலையில் 50% மானியத் தொகை அல்லது உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு முறையே உச்ச வரம்பு ரூ.12,000 அல்லது ரூ.10,000 என நிர்ணயிக்கப்பட்டு 1700 படகுகளுக்கு ரூ.1.70 கோடிக்கு நிதி அனுமதி வழங்கப்பட்டது. 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.2 கோடி வழங்கப்பட உள்ளது.


### நாட்டுப் படகுகளில் பொருத்தப்படும் இயந்திரங்களுக்கு விலை ஏற்றத்தினை ஈடு செய்தல்:

நாட்டுப் படகுகளில் பொருத்தப்படும் இயந்திரங்களின் அபரிமிதமான விலையேற்றத்தினைக் கருத்தில் கொண்டு 1997-98ல் மத்திய, மாநில அரசுகள் வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரத்திற்கு வழங்கிவந்த மான்யத்துடன், உள்நாட்டு இயந்திரம் வாங்கக் கூடுதல் மான்யம் ரூ.2000 மற்றும் இறக்குமதி செய்யப்படும் இயந்திரம் வாங்க மான்யம்ரூ.3000 வீதம் வழங்க ரூ.49.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### பால்வளத் துறை

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 24.10.96 முதல், ஏழை பால் உற்பத்தியாளர்களுக்குப் பசும்பால் மற்றும் எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் கொள்முதல் விலையை அதிகரித்தது. இதனால் சுமார் 25 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பிஸ்தா மற்றும் ஸ்ட்ராபெர்ரி ஆகிய இரு புதுவகை நறுமணப் பாலும், மாம்பழச்சாறும் 200 கிராம் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு விற்கப்பட்டு வருகிறது. சோளிங்கநல்லூர் பால்பண்ணையின் எல்லா கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டு, தற்போது நாளொன்றுக்கு சுமார் 275 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் ரூ.705 இலட்சம் திட்ட மதிப்பில் ஒருங்கிணைந்த பால் பண்ணை மேம்பாட்டுத்திட்டம் திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.



இத்திட்டம் ரூ.465.50 இலட்சம் மதிப்பீட்டில் காமராசர் மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்ட ஒரு பால் பண்ணை திருவில்லிப்புத்தூரில் கட்டப்பட்டு வருகிறது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் ரூ.107 இலட்சம் மதிப்பீட்டில், அம்பத்தூர் பால்பண்ணையில் பாலைக் குளிர்விக்கத் தற்போது உபயோகப்படுத்தப்படும் பிரியான் வாயுவுக்குப் பதிலாக அம்மோனியா வாயுவை உபயோகப்படுத்துவதற்குத் தேவையான இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பிரியான் வாயுவை விட அம்மோனியா வாயு மலிவானதால் பாலைக் குளிர்விக்க ஆகும் செலவு குறைவாக இருக்கும். அம்மோனியா வாயு சுற்றுச்சூழலுக்கு ஏற்றது.

## இந்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்


இந்த அரசு எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ.245.18 இலட்சங்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ.91.45 இலட்சங்களும் 100 விழுக்காடு மான்யமாக வழங்கியது.

இத்திட்டத்தினால் 1,27,000 பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்தியது:

1980-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் பணி மறுக்கப்பட்ட தொழிலாளர்களில் இந்த அரசு 1989-ஆம் ஆண்டில் பதவியில் இருந்தபோது 370 தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியது. மறுபடியும் இந்த அரசு 13.05.96இல் பதவியேற்ற பிறகு 1980-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பணி மறுக்கப்பட்ட மேலும் 300 தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியது.

★




ஹோட்டல் நியூ ராஜேஸ்வரி
அண்ணா பஸ் நிலையம் அருகில்
மதுரை-20.

10 ஆண்டுகள் பணிபுரிந்த
சுமைதூக்கும் தொழிலாளர்
நிரந்தரப் பணி நியமனம்
என்றுரைத்த அரசுக்கு
இதயபூர்வமான எமது நல்வாழ்த்து!



பக்கிரான்ஸ் பட்டு சென்டர்
மெயின் ரோடு, திண்டுக்கல்

# வீட்டு வசதி!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 1996-97ஆம் ஆண்டில், ரூ.247 கோடி செலவிட இலக்கு நிர்ணயித்து, ரூ.248.33 கோடி செலவு செய்துள்ளது; இவ்வாண்டில் மொத்தம் 20,500 குடியிருப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயித்து, 20,510 குடியிருப்புகளை உருவாக்கியிருக்கிறது.

### 20 அம்சத் திட்டம்

20 அம்சத் திட்டத்தின் கீழ், 3800 குடியிருப்புகளைப் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கும், 3500 குடியிருப்புகளைக் குறைந்த வருவாய் மக்களுக்கும் உருவாக்கிட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. வாரியத்தின் சாதனைகளாக 3,894 குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கும், 3,824 குடியிருப்புகள் குறைந்த வருவாய் மக்களுக்கும் இவ்வாண்டில் உருவாக்கப் பட்டன.

### சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வீட்டுவசதி

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வசிக்கும் மக்களின் வீட்டுவசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, 1996-97ல் 12 நகரங்களில் ரூ.40.83 கோடி செலவில் 4503 குடியிருப்புகளை உருவாக்கிட திட்டமிடப்பட்டது. இதன்படி, தற்போது 12 நகரங்களிலும் 4320 குடியிருப்புகளை ரூ.51.79 கோடி செலவில் உருவாக்கிட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் 75 சதவிகித அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் 1997-98ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

### சார்பு நகரங்கள் உருவாக்குதல்


சென்னை நகரில் வளர்ந்துவரும் வீட்டுவசதித் தேவைகளைக் கருத்தில் கொண்டும், சென்னை நகரின் நெருக்கடியைக் குறைக்கவும், வீட்டுவசதி வாரியம், சென்னை நகரைச் சுற்றி-திருமழிசை, ஜமீன் பல்லாவரம், சோழிங்கநல்லூர் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் சார்பு நகரங்களை உருவாக்கத் திட்டமிட்டது.

இதன்படி, திருமழிசையில் சுமார் 1450 ஏக்கர் நிலத்தைக் (தனியார் மற்றும் அரசு நிலங்கள்) கையகப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்துவருகிறது. சோழிங்கநல்லூரில் சுமார் 600 ஏக்கர் நிலத்தைக் (தனியார் மற்றும் அரசு நிலங்கள்) கையகப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்துவருகிறது. மேலும், மாமல்லபுரத்தில் சுமார் 400 ஏக்கர் நிலம் (தனியார் மற்றும் அரசு நிலம்) கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஜமீன் பல்லாவரத்தில் நிலத்தடி நீர் வீட்டு உபயோகத்துக்கு ஏற்புடையதாக இல்லாமலிருப்பதால், இத்திட்டத்திற்குத் தேவையான நீரைத் தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத் திடமிருந்து பெற, கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்புதல் கிடைத்தவுடன், நிலம் கையகப்படுத்தும் பணிகள் துவங்கப்படும்.

### புதிய மாவட்டங்களில் வீட்டுவசதித் திட்டங்கள்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைநகரங்களில் அரசு அலுவலர்களுக்கான வீட்டுவசதித் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பெரம்பலூர், திருவள்ளூர் மாவட்டத் தலைநகரான பெரம்பலூரில் 276 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.8.21 கோடி செலவிலும், கரூர்-தீரன் சின்னமலை மாவட்டத் தலைநகரான கரூரில் 54 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.1.73 கோடி செலவிலும், திருவாரூர்-ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டத் தலைமையிடமான திருவாரூரில் 36 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.0.86 கோடி செலவிலும் நாகை காயிதே மில்லத் மாவட்டத் தலைமையிடமான நாகப்பட்டினத்தில் 24 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.0.94 கோடி செலவிலும் மற்றும் திரு வண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் தலைமை யிடமான திருவண்ணாமலையில் 138 அடுக்குமாடி





குடியிருப்புகள் ரூ.3.86 கோடி செலவிலும் செயல்படுத்தும் திட்டங்களுக்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**வீட்டுவசதி வாரியத்திற்கு ஹட்கோவின் பரிசு**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தான் செயற்படுத்திவரும் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களுக்கு ஹட்கோவிடமிருந்து பெருமளவில் நிதியுதவி பெற்றுவருகிறது.

"இந் நிறுவனம் தன்னிடம் கடன்வசதி பெறுகின்ற நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறமை, அவற்றின் தொழில் நுட்பம், நிர்வாகம், நிதி நிலைமைத் திறமைகளைக் கருத்தில்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய ரீதியில் தேர்வுசெய்து பரிசீலனை வழங்கி ஊக்குவிக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பரிசினைப் பெற்றுவருகிறது.

1996-97ஆம் ஆண்டில் நகர மேம்பாட்டுத் திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தியதற்கு அகில இந்திய ரீதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தேர்வு செய்யப்பட்டு 25.4.97 அன்று பரிசு ஒன்று 'ஹட்கோ'வினால் வாரியத்திற்கு வழங்கப் பட்டது.

**பசுமைக் கால்வாய் முறை: (GREEN CHANNEL)**

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், தன்னிடம் கடன் வசதி பெறும் நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறமையை உறுதி செய்வதற்காக, அவற்றின் தொழில்நுட்பம், நிர்வாகம் மற்றும் நிதி நிலைத் திறமைகளைக் கண்டறிந்தது.

அதாவது, அவற்றின் செயல்பாடுகளின் விளைவுகள், திறமை, நிர்வாகச் செலவுகள், கணக்குத் தணிக்கை, பணம் வசூல் நிலைமை, கடன்களைத் திருப்பிச் செலுத்தும் திறன், நிதி திரட்டும் திறன் ஆகியவற்றால் கணக்கிடப்படும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தரத்தினை ஆராய்ந்து, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் இந்தியாவிலுள்ள வீட்டு வசதி வாரியங்களுக்குள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அதிகக் கணிப்புப் புள்ளிகளை வழங்கி, பசுமைக் கால்வாய் முறையைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டங்களைச் செவ்வனே செயற்படுத்தி வருவதைப் பாராட்டும் விதத்தில் ஹட்கோ நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பசுமைக் கால்வாய் முறையை வழங்கி வாரியத்தைப் பெருமைப்படுத்தியுள்ளது.

**1997-98ஆம் ஆண்டுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

**நிலவங்கித் திட்டங்கள்**

அரூர், பாலக்கோடு, ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருவில்லிப்புத்தூர், சங்கரி, பெரியகுளம், தேனி, ஒட்டன்சத்திரம், ராஜபாளையம், தென்காசி ஆகிய 12 நகரங்களில், பொருளா தாரத்தில் நலிவுற்ற மக்களுக்காக 1178 மனைகள் உருவாக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன, மற்ற 3 நகரங்களில் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**சென்னை வில்லிவாக்கத்தில் பலமாடிக் கட்டிடம்**

சென்னை, வில்லிவாக்கத்தில் மாடி வீடுகள் மற்றும் கடைகள் அடங்கிய பதினோரு மாடிக் கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**சேலம் நகரில் வீட்டுவசதித் திட்டம் :**

சேலம் நகரப் பேருந்து நிலையத்திற்கு அருகில் 1.07 எக்டேர் நிலத்தில் உயர் வருமானக் குடும்பங்களுக்கு 93 'ஏ' வகை அடுக்குமாடி வீடுகளும் நடுத்தர வருமான குடும்பங்களுக்கு 75 'ஏ' வகை அடுக்குமாடி வீடுகளும் HDFC நிதியுதவியுடன் கட்டுவதற்கான திட்டம் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**ஏர்க்காடு மலைப்பகுதியில் வீட்டு வசதித்திட்டம்:**

ஏர்க்காடு வட்டத்தில் உள்ள கக்கம்பாடி கிராமத்தில் 7.18 எக்டேர் நிலத்தில் 72 தொகுப்பு வீடுகளும், நடுத்தர வருமானப் பிரிவினருக்க 58 வீடுகளும் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 259 வீடுகளும் கட்டுவதற்கான தோராய நிதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வாரியத்தின் ஒப்பு தலுக்காக வைக்கப்படவுள்ளது.

**கோயம்புத்தூர் அருகே பெரியநாயக்கன்பாளையத்தில் பெரிய அளவிலான நில மேம்பாட்டுத் திட்டம்**

கோயம்புத்தூர் அருகே, பெரிய நாயக்கன் பாளை யத்தில் பெரிய அளவிலான நில மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்துவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கான நில - வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**ஓசூரில் நில மேம்பாட்டுத்திட்டம்**

ஒசூரில் பெரிய அளவிலான மனை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்துவதற்கான பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு வருமானப் பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்வதற்காக 1,583 மனைகள் உருவாக்கப்படும்.

**கோயம்புத்தூரில் நில மேம்பாட்டுத்திட்டம்**

கோயம்புத்தூரின் அருகே காளப்பட்டியில் மொத்தம் 926 மனைகள் மேம்படுத்தும் திட்டத்திற்கான தோராய மதிப்பீடு சேலம் சரக மேற்பார்வைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டு, வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது. விரைவில் வாரியக்கூட்டத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படும்.

**காரைக்குடியில் நில மேம்பாட்டுத் திட்டம்:**

காரைக்குடி அருகே கழனிவாசல் கிராமத்தில், பல்வேறு வருவாய்ப் பிரிவினரும் பயனடையும் விதமாக 484 மனைகள் ரூ.205 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது.

**அரசின் கடைநிலை ஊழியருக்கான வீட்டு வசதித் திட்டம் :**

அரசுப்பணியிலுள்ள கடைநிலை ஊழியர்களின் வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு,சென்னையிலும் மதுரையிலும் 100 அடுக்கு மாடி வீடுகள் ரூ.150 இலட்சம் செலவில் கட்டும் திட்டம் வாரியத்தின் பரிசிலனையிலுள்ளது. முதல் கட்டமாக, சென்னை மேஜர் டிரஸ்ட்புரத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நில வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**வாரியப் பணியாளர்களுக்கு சென்னையில் வீட்டு வசதி**

சென்னையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்களின் வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு, ஜாபர்கான்பேட்டையில் 48 அடுக்குமாடி வீடுகள் ரூ.214.68 இலட்சம் செலவில் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, வாரியக்கூட்டத்தின் ஒப்புதலுக்காக வைக்கப் பட்டுள்ளது.

---


படிக்க...பயன்பெற...பாதுகாக்க

**தமிழரசு**

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.72

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை - 600 002

ஆதிதிராவிட மாணவர்க்கு
40 புதிய மாணவர் இல்லம்
கட்டித்தர வகை செய்த
தமிழ்நாடு அரசுக்குத்
தலை வணங்குகிறோம்!




சேது இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி
393, அண்ணா நகர்,
மதுரை - 625 020.

# குடிசைப்பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீட்டுவசதி, குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப்பகுதி மக்களை மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்து மாற்றிடங்களில் குடியமர்த்துதல் போன்ற பணிகளை நிறைவேற்றிவருகின்றது. இத் திட்டப்பணிகள் மாநில மற்றும் மைய அரசின் மானியத்துடனும், 'அட்கோ' நிறுவனத்தின் கடனுதவியுடனும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1996-97ஆம் ஆண்டில் 31,200 குடும்பங்கள் பயனடையும் வகையில் திட்டப்பணிகளுக்காக ரூபாய் 30.95 கோடி செலவிட வாரியம் திட்டமிட்டுள்ளது. 1997-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய திட்டப் பணிகளுக்காக ரூபாய் 23.34 கோடி வாரியம் செலவிட்டுள்ளது.

குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ், ரூபாய்7.48 கோடி செலவில் 2,004 குடும்பங்களும், நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூபாய் 6.34 கோடி செலவில் 140 குடும்பங்களும் பயனடைந்துள்ளன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 3.81 கோடி செலவில் 3,293 குடும்பங்கள் பயனடைந்துள்ளன; விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூபாய் 2,779 கோடி செலவில் 13,500 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ரொக்கக் கடன் வசதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 19.97 இலட்சம் செலவில் 231 குடும்பங்களும், நில வங்கித் திட்டத்தின்கீழ் ரூபாய் 27.39 இலட்சம் செலவில் 513 குடும்பங்களும் பயனடைந்துள்ளன.

### 1997-98-ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

1. சென்னை மாநகரில் கூவம், பக்கிங்காம் கால்வாய், அடையாறு, ஓட்டேரி நல்லா, மெரினா கடற்கரை மற்றும் துரித இரயில் போக்குவரத்துப் பகுதி 2ல் வசிப்பவர்கள் மற்றும் நடைபாதையில் குடும்பம் நடத்தும் ஏழைகள் ஆகியோருக்கு மாற்று இடமாகச் சென்னைக்கு அருகில் ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் செம்மஞ்சேரி ஆகிய பகுதிகளில் ரூ.204 கோடி செலவில் 14,500 குடியிருப்புகள் கட்டுதல்.
2. இந்த நிதியாண்டில் சென்னையில் 18 குடிசை மாற்று வாரியப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்து தருதல்.

### வீட்டுவசதி கூட்டுறவுச்சங்கங்கள்:

வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள் 14.5.96 முதல் 30.4.97 வரை கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் 50,949 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 229.19 கோடி கடனுதவி வழங்கியுள்ளது. அதில், பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்காக ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 30,399 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 32.47 கோடி கடனுதவியும், குறைந்த வருவாய்ப் பிரிவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1,398 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 7.23 கோடி கடனுதவியும், நடுத்தர வருவாய்ப்பிரிவு (ஊரகப் பகுதி) வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1,689 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 12.66 கோடி கடனுதவியும், வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் 2,141 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 1.26 கோடி கடனுதவியும் மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 13,828 வீடுகளும் கட்டுவதற்கு ரூபாய் 173.79 கோடி கடனுதவியும் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ளன.

இதுதவிர, ஊரக வீடுகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் (சுப்ரா) 1,276 வீடுகளுக்கு ரூ.1.48 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதி வீடுகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 218 வீடுகளுக்கு ரூபாய் 0.30 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

கடன் வழங்குதல், கடன் வசூல், வைப்புத்தொகை திரட்டுதல், வீடுகள் கட்டி முடித்தல் போன்றவற்றில் இதர மாநில வீட்டுவசதி இணையங்களைக் காட்டிலும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தொடர்ந்து முதலிடத்தில் இருப்பதால் 1996-97ஆம் ஆண்டில் சிறந்த வீட்டுவசதி இணையமாகத் தேர்வு செய்யப்பட்டு 'அட்கோ' நிறுவனக் கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

### 1997-98-ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்:

1. நகர்ப்புறத்தைச் சுற்றியுள்ள சிறிய மற்றும் பெரிய கிராமங்கள் ஆகியவற்றில் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற - பின்தங்கிய மக்கள் வீட்டுவசதி பெறுவதற்குக் கடனுதவி அளிக்கும் திட்டம்.
2. ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்க்கு 45,000 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 63.23 கோடி கடனுதவி அளித்தல்.

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:

சென்னை-கோயம்பேட்டில் அழகுபொருள் அங்காடி சுமார் ரூ.77 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த 28.8.1996ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இந்த அங்காடியில் கனிகளுக்காக 456 கடைகளும், பூக்களுக்காக 456 கடைகளும், காய்கறிகளுக்காக 1,422 கடைகளும், மொத்தம் சுமார் 65 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளன. இவைதவிர- காவல் நிலையம், தபால்/தந்தி நிலையம், தொலைபேசி நிலையம், வங்கி முதலிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.


சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு ரயில் வசதியைப் பெருக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, சென்னை கடற்கரையிலிருந்து திருமயிலை வரை உள்ள ரயில் பாதையை மேலும் வேளச்சேரி வரை சுமார் 10.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.605 கோடி செலவில் நீட்டிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. 1996-97ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.50 கோடி இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டம் சுமார் ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்படும். சென்னை கடற்கரையிலிருந்து இரயில்கள் சேப்பாக்கம் வரை தற்போது இயங்கிவருகின்றன. மேலும் இரயில்களை சேப்பாக்கம் முதல் திருமயிலை வரை இயக்குவதற்கு வேண்டிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. திருமயிலையிலிருந்து திருவான்மியூர் வரை, சுமார் 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரயில்பாதை அமைக்க சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கீழ் உள்ள பணி ஒப்பளிப்புக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. இரயில்வே துறையும் பூர்வாங்கப் பணிகளைத் துவக்கியுள்ளது. திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான மீதமுள்ள 3.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரயில் பாதை அமைக்க ஆய்வுப்பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

வெளிவட்டச்சாலை அமைக்கும் பணியில் பல்லவன் போக்குவரத்துக்கழக ஆய்வுக்குழு நில எடுப்பு சம்பந்தமான ஆய்வை வண்டலூரிலிருந்து ஆவடி வரை, சுமார் 29 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆய்வுப்பணியை முடித்துள்ளது. இதன் அடிப் படையில் நில எடுப்புக்கான பணிகள் துவக்கப் பட்டுள்ளன.

### 1997-98-ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்:

1. சென்னைப் பெருநகரப் பகுதியில் ரூ.326 கோடி செலவில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ரூ.98 கோடி செலவில் கட்டப் படவுள்ள புறநகர் பேருந்து நிலையம் மற்றும் கோயம்பேட்டில் மேம்பாலம், ரூ.44 கோடி செலவில் பெரம்பூர் மற்றும் நுங்கம்பாக்கம் ஆகிய பகுதிகளில் கட்டப்படவுள்ள மேம் பாலங்கள் ரூ.21 கோடி செலவில் சூளைமேடு மற்றும் ஈக்காடுதாங்கல் ஆகிய பகுதிகளில் நிறைவேற்றப்படவுள்ள குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஆகியவை அடங்கும். ரூ.200 கோடிக்கான கூடுதலான திட்டங்களுக்கு 1997-98ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்படும்.

2. குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல் ஆகிய பணிகள், வணிக வளாகம் தமிழ்நாட்டிலுள்ள நகர உள்ளாட்சி அமைப்புகளில் போக்குவரத்து ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாடு



நகர உள்ளமைப்பு நிதி வசதி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மாநில அரசின் பங்கு ரூ.120 கோடியாக இருக்கும். மற்றும் அகில இந்திய நிதிநிறுவனங்களின் பங்கு ரூ.50 கோடியாக இருக்கும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்நிறுவனத்திலிருந்து ரூ.60 கோடி வரை கடன்கள் வழங்கப்படும். இவை தவிர, நகர்ப்பகுதியில் உள்ள ஏழைகள் பயன்பெறும் வகையில் திட்டங்களுக்கு மானிய நிதிஉதவி அளிக்கும் வகையில் ரூ.30 கோடிக்கு மான்ய நிதி ஏற்படுத்தப்படும்.

3. மத்திய இரயில்வே வரவு - செலவு ஒதுக்கீட்டில் பெருமளவு விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் 2-வது நிலைக்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று மாநில அரசும் 1997-98 வரவு செலவு ஒதுக்கீட்டில் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே, லஸ் முதல் வேளச்சேரி வரையிலான 2வது நிலை பெருமளவு விரைவு ரயில் போக்குவரத்துத்திட்டம் நிறைவேற்றும் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

## நகர் ஊரமைப்புத்துறை

### 1996-97ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

சிறு நகரங்களுக்கு-அதன் எல்லைக்கும், பெரிய நகரங்களுக்கு-நகர் மற்றும் அதைச் சார்ந்துள்ள பகுதிகளுக்கும் முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப் படுகின்றன. நகரப் பகுதிகளில் உள்ள நிலங்களின் பயன்பாட்டை நெறிப்படுத்துதல், அவற்றைப் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகளுடன் இணைத்தல் ஆகியவை முழுமைத் திட்டங்களின் நோக்கமாகும். அத்தகைய முழுமைத் திட்டங்கள் 105 நகரங்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ளன.

விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் வளர்ந்து வரும் நகரத்தில் குறிப்பிட்ட பகுதிகளுக்குத் தயாரிக்கப் படுகின்றன. தற்போதுள்ள நிலப்பயன், உத்தேச நிலைப்பயன், பல்வேறு பயன்களுக்குத் தேவை யானதும், சமூக, கல்வி, பொழுதுபோக்கு, செய்தித் தொடர்பு மற்றும் சாலைகள் ஆகிய அடிப்படை கட்டமைப்புக்குத் தேவையான நிலங்களையும் ஒதுக்கீடு செய்வதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். இத்துறை, இதுகாறும் 1,384 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்துள்ளது.

புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மாமல்லபுரம் போன்ற மரபு வழி பெருமையடைந்த பகுதிகளுக்கும், தொழில் துறையில் மிக விரைவாக வளர்ந்து வரும் ஓசூர் போன்ற நகரங்களுக்கும் தயாரிக்கப் படுகின்றன. இதுகாறும், ஐந்து புது நகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஊரகப்பகுதி மக்களுக்குத் தேவையான குறைந்த பட்ச அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றும் வட்டாரத்திட்டங்கள் இதுகாறும் இருபத்தி ஒன்பது தயாரிக்கப்பட்டுள்ளன.

கட்டமைப்புத் திட்டங்கள் நகரங்களில் காணப்படும் கட்டமைப்புகளின் குறைகளை ஆராய்ந்து, அவற்றைச் சரி செய்வதற்குத் தேவைப்படும் முதலீடுகளையும் தெளிவுபடுத்து கின்றன. இதுகாறும் 60 கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான திட்டங்கள், மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் மேம்பாடு திட்டங்களுக்கும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

உலக வங்கித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத்திட்ட நிதி உதவியுடன் 30 நகரங்களுக்கு வான்வழிப் புகைப்பட விவரங்கள் பெறப்பட்டுள்ளன. தனித் திட்டமாக நீலகிரி மாவட்டத்திற்கும் புகைப்படங்கள் பெறப்பட்டுள்ளன. திருவண்ணாமலை மற்றும் வேலூர் நகரங்களுக்கு அத்தகைய படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கடலோரப்பகுதி மேலாண்மைத் திட்டத்தினைத் தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது.


26 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கும் நான்கு பெரு நகரங்களுக்கும் ரூ.58.95 இலட்சம் செலவில் பல்லவன் போக்குவரத்து ஆலோசனை நிறுவனத்தின் உதவியுடன் போக்குவரத்து இயக்கம் மற்றும் மேலாண்மைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 22 நகரங்களுக்குப் போக்குவரத்துச் செயல்முறை மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு-திட்டங்களைச் செயலாக்கும் வகையில் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1997-98ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

1. விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் உள்ளூர் திட்டக்குழுமங்கள் அமைத்தல்,

2. பழனி, திருத்தணி, கும்பகோணம், இராமேஸ்வரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருவண்ணா மலை, காஞ்சிபுரம், பூம்புகார், சிதம்பரம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய நகரங்களுக்கு மேம் பாட்டுத்திட்ட அறிக்கை தயாரித்தல்.

3. பொன்னேரி, செங்கம், உளுந்தூர்பேட்டை, தேன்கனிக்கோட்டை, பெருந்துறை, உசிலம் பட்டி, வேடசந்தூர், பாபநாசம், பெரம்பலூர், கொளத்தூர் ஆகிய 10 வட்டங்களில் நடுத்தர நகரங்கள் அமைக்க ஆய்வு செய்தல். ❑



60 வயதுக்கு மேற்பட்ட நெசவாளர்க்கு
ரூ.150 ஓய்வூதியம்
அளிக்க முன்வந்த
அரசுக்கு நல்வாழ்த்து!

தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு
பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்
கனகமுட்லு, அஞ்சல் பெட்டி எண்.13
சேலம் மெயின் ரோடு, கிருட்டிணகிரி.

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெய்வேலி அனல்மின் நிலையம் ஒன்றை விரிவுபடுத்துவதிலிருந்து 168 மெகாவாட்.

இராமகுண்டத்திலுள்ள கூடுதல் பிரிவிலிருந்து 138 மெகாவாட்.

உத்திரப்பிரதேசத்திலுள்ள "ரிகாண்டு" அனல் மின் நிலையத்திலிருந்து 318 மெகாவாட்.

இவ்வாறு நமது அரசு, இம் மாநிலத்திலுள்ள மின் உற்பத்தி ஏற்ற நிலையிலிருக்க உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

**வரி சீர்த்திருத்தங்கள்:**

தொழில் வளர்ச்சியையும், வணிகத்தையும் ஊக்குவிப்பதற்கு, நிலையான தெளிவான இணக்கமான வரிவிதிப்பை உருவாக்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், நீண்டகால வரிவிதிப்புக் கொள்கை ஒன்றை அறிவித்தார். அதற்கிணங்க, விற்பனை வரி விதிப்பு முறையில் பல சீர்த்திருத்தங்கள் செய்யப்பட்டன. பல இனங்களைப் பொறுத்தவரையில் வரிகள் குறைக்கப்பட்டன. இந் நடவடிக்கைகளை வணிக மற்றும் தொழில் நிறுவனங்கள் வரவேற்றுள்ளன. இந்த நீண்ட கால வரிவிதிப்புக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:




வரி வீதங்கள் பெருமளவு தெள்ளத் தெளிவாக இருக்கச் செய்வதற்கும், வரி விதிப்பு மற்றும் வசூல் எளிதாக இருக்கச் செய்வதற்கும், வரிவீதப் படிமுறையையும் சீரமைத்தல்.

வரிவிதிப்பிற்கு அதி நவீன முறையையும், நடைமுறைகளையும் கொண்டுவருதல்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்க உதவி அளிக்க வகை செய்தல்; உள்ளூர் கொள்முதல் உள்ளூர் தயாரிப்பு ஆகியவற்றை ஊக்குவித்தல்.

விலக்களித்த, இணக்கவரி விதித்தல், சுயவரி மதிப்பீடு நடைமுறைகள் ஆகியவைகளில் எண்ணற்ற சிறுதொழில் வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

வீட்டுத் தேவைப் பொருட்கள் மீதான வரிச்சுமையைக் குறைத்தல்.

இதன் பயனாக, பல பொருட்களுக்கு வரிகள் ரத்து செய்யப்பட்டன. ஏனைய பல பொருட்களுக்கு வரி குறைக்கப்பட்டது. மேல்வரி முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டது. வணிகர்களுக்குத் தொடர்ந்து எரிச்சலூட்டிய பல்முனை வரி ரத்து செய்யப் பட்டுள்ளது. ரூபாய் பத்து இலட்சம் அல்லது அதற்குக் குறைவாக விற்றுமுதலைக் கொண்ட வரிவிதிக்கப் பெறுபவர்களுக்கு சுயவரி மதிப்பீடு நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

**சாலை அடிப்படை வசதி:**

தமிழ் நாட்டிலுள்ள சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்காகவும், அவற்றை வலுப்படுத்துவதற்காகவும், "உத்திகளைத் தேர்வு செய்யும் ஆய்வு" என்ற திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. 23 பகுதிகளில் 3,250 கி.மீ. நீளமுள்ள சாலைகள் கண்டறியப்பட்டன. 375 கி.மீ. நீளமுள்ள சாலைகள் தொடர்பான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தயாரிக்கவும் விரிவான பொறியியல் வடிவமைப்பை உருவாக்கவும் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**ஊரக வளர்ச்சி:**

தொழில் வளர்ச்சி என்பது அரசு முக்கியத்துவம் செலுத்திவரும் ஒரு துறையாக இருந்தபோதிலும், ஊரக வளர்ச்சியிலும் இந்த அரசு இதற்கு நிகராக முக்கியத்துவத்தை அளித்துவருகிறது. "ஊரக வளர்ச்சிக்காக" 1997-98ஆம் ஆண்டில் மாநில அரசுத் திட்டங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதற்காக ரூ.789.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 74,000 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு "கான்கிரீட்" கூறைகள் அமைப்பது என்ற தனித்தன்மையைத் தமிழ்நாடு கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டில் சுமார் 5000 கி.மீ. தொலைவுள்ள கிராம மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அமைக்கப்பட்டன.


முதியோர் கல்வியை மேம்படுத்தவும், மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிப்பதோடு, கிராமங் களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கிராமப்பகுதியிலுள்ள இளைஞர்கள் பணியைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் மக்கள் நலப் பணியாளர்கள் பதவிகள் 35,000த்தை ஏற்படுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வோர் ஊராட்சியிலும், ஆண் பணியாளர் ஒருவரும் பெண் பணியாளர் ஒருவரும் இருப்பர்.

கிராமங்களைப் படிப்படியாக மேம்படுத்தும் நோக்குடன், "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டமன்றப் பேரவைத் தொகுதி ஒவ்வொன்றிலும் ஒரு கிராமம் ஒவ்வோர் ஆண்டிலும் தெரிவு செய்யப்பட்டு, அனைத்து ஊழியர்களுடன் கூடிய நவீன கிராமமாக மேம்படுத்தப்படும்.

''சுய உதவி'' என்ற மனப்பான்மையை மக்களிடையே உருவாக்க வழிகோலும் பொருட்டு "மனு நீதித் திட்டம்" என்ற பொதுமக்கள் தொடர்புத் திட்டம் புத்துயிர் அளிக்கப்படும். இவ்வாறு செய்வதன் மூலம், மக்கள் அவர்களுடைய தேவைகளை அவர்களே நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர்கள் முன்வருவர்.

**மனித வள மேம்பாடு:**

300 அல்லது அதற்கு மேற்பட்டு மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலிருந்து ஒன்று முதல் இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவுப் பகுதிக்குள் தொடக்கப்பள்ளி, ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. தரமான தொடக்கக் கல்வியை அளிக்க வேண்டும் என்ற கொள்கைக் கிணங்க, 1996-97ஆம் ஆண்டில் 85 புதிய தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்தவும், 21 தொடக்கப்பள்ளிகளை நடுத்தரப் பள்ளிகளாக தரமுயர்த்தவும், 1997-98ஆம் ஆண்டில், 168 தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்தவும், 41 தொடக்கப் பள்ளிகளை நடுத்தரப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது. ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கான நடைமுறையைச் சீராக்கி முறைப்படுத்தப்பட்டுள்ளது. 4 முதல் 5 ஆண்டு களாகக் காலியாக இருந்த 11,652 இடைநிலை ஆசிரியர் பதவிகள் கடந்த ஆண்டில் நிரப்பப்பட்டன.




கல்லூரிப் பட்டப்படிப்பு படித்தவர் எவருமில்லாத குடும்பங்களிலிருந்து அதிக மதிப்பெண் பெறும் 10 மாணவர்களுக்கு, தொழிற்கல்வி பயிலுவதற்காகும் செலவுத் தொகையை அரசே ஏற்றுக்கொள்ள உறுதி செய்யும் வகையில், அரசு, புதிய திட்டங்களைக் கொண்டுவந்துள்ளது. இந்த ஆண்டு முதற்கொண்டு உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்விலும், பிளஸ் 2 வகுப்பு இறுதித் தேர்விலும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடத்தைப் பெறும் மாணவர்களின் உயர்கல்விக்கான செலவை ஏற்றுக் கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

**சுகாதாரம்**

தொடக்க சுகாதார மையங்களுக்காக 600 கட்டடங்கள் கட்டும் விரிவான திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது. இதனால் மாநிலத்திலுள்ள 1420 சுகாதார மையங்களுக்கும் உரிய கட்டடங்கள் இருக்கும். 124 தொடக்க சுகாதார மையங்கள் நாள் முழுவதும் பணிபுரியும் வகையில் அரசு ஒரு திட்டத்தைச் செயல் படுத்தியுள்ளது. ஊராட்சி ஒன்றியம் ஒன்றிற்குக் குறைந்தது ஒரு மையம் என்ற வீதத்தில் 420 தொடக்க சுகாதார மையங்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்படும்.

**ஊரகக் குடிநீர் வழங்கல்**

இவ்வரசு ஊக்கமிகு திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்கு முன், இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊரகக் குடியிருப்பு களுக்கும் நாளொன்றுக்கு 40 லிட்டர் பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதோடு, தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத கிராமங்களே கிடையாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்தும். 1997-98ஆம் ஆண்டிற்கு மட்டும் இந்நோக்கத்திற்காக ரூ.250 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்**
**மகளிருக்குப் பண உதவித் திட்டங்கள்**

ஏழை விதவைகளின் மகள்களின் திருமணத்திற்கு ரூ.2,000 அளிக்கப்படுகிறது. இத் திட்டத்திற்காக, 1997-98ஆம் ஆண்டில் ரூ.21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவியை, அரசு ரூ.5000லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 8ஆம் வகுப்பும், அதற்கு அதிகமாகவும் படித்துள்ள ஏழைப் பெண்களின் திருமணத்தின்போது ரூ.10,000 அளிக்கப்படுகிறது. இத் திட்டத்திற்காக இவ்வாண்டில் ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 20,000 ஏழைப் பெண்கள் பயனடைவர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், அரசு ரூ.5.81 கோடி ஒதுக்கியுள்ளது.


பயனடைவோர் ஒருவருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கருவுற்ற காலத்தில் கடைசி இரு மாதங்களுக்கும், குழந்தை பிறந்த பின்னர் இரு மாதங்களுக்கும் ஏழை மகளிருக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்ய இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

சுய உதவி குழுக்கள் அமைப்பின் மூலம் பெண்களிடையே சுய வேலைவாய்ப்பைப் பெருக்கும் பொருட்டு, இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் படிப்படியாக விரிவாக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. நிறுவன நிதியுதவி உட்பட இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ.1440 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் 10 இலட்சம் மகளிர் 5 ஆண்டுக் காலத்தில் பயனடைவர்.

முன்னோடி அடிப்படையில் பின்தங்கிய 5 மாவட்டங்களில் 50 மகளிர் நல மையங்கள் ஏற்படுத்தப்படும். சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம், எழுத்தறிவு போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து விழிப்புணர்வு முகாம்களை இம்மையம் நடத்தும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிடர்களுக்கான திட்டங்கள்

நம்முடைய அரசு, இம் மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக எப்போதும் செயலாற்றிவருகிறது. ஒடுக்கப்பட்ட இந்த வகுப்பினருக்குக் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் 69 சதவீத இடஒதுக்கீட்டைப் பெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிட பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கல்வி முன்னேற்றம் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றுக்கு நம்முடைய அரசு உயர் முன்னுரிமை அளித்துவருகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோரின் நலனுக்காக 1997-98ஆம் ஆண்டு மாநில வரவு செலவுத் திட்டத்தில் 334 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனுக்காக நடப்பாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 64.3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





ஆதிதிராவிடர் வகுப்பினருக்காகக் கடந்த ஆண்டில் மட்டும் மாணவரில்லங்கள் புதிதாகத் திறக்கப்பட்டன; இந்த மேலும் மாணவர் இல்லங்கள் 40 திறக்கபட்டுவருகின்றன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகக் கடந்த ஆண்டில் 45 புதிய மாணவரில்லங்கள் திறக்கப்பட்டன. வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லங்கள் அனைத்திற்கும் அடுத்த மூன்றாண்டுகளுக்குள் சொந்தமாகக் கட்டிடங்கள் கட்ட அரசு தீர்மானித்துள்ளது. பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்காக மாணவரில்லம் ஒன்று புதிதாக இந்த ஆண்டில் திறக்கப்பட இருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நடத்துகின்ற அனைத்து மேனிலைப்பள்ளிகளுக்கும் ஆய்வுக் கூடக் கட்டிடங்கள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமுதாயத்தில் வறிய நிலையிலுள்ள ஏனைய பிரிவினர் ஆகியோருக்கு இலவச வீட்டுமனைகளை வழங்கும் பெருந்திட்டம் ஒன்று 30 கோடி ரூபாய் மதிப்பீட்டு செலவில், இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதல் தடவையாக இத்திட்டம் எல்லா வகுப்புப் பிள்ளையையும் சேர்ந்த வறிய குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**ஓராண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

கடந்த ஓராண்டில் இந்த அரசு கொண்டு வந்துள்ள, புதிய திட்டங்களும், நடைமுறையிலுள்ள திட்டங்களில் செய்துள்ள மேம்பாடுகளும் எண்ணற்றவை. அவையனைத்தையும் நாம் பட்டியலிட முயன்றால், அது மிக நீண்டதாக இருக்கும். நாம் எந்த இலக்கை நோக்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுவதே மேலே விரித்துரைக்கப்பட்டதன் நோக்கமாகும். இந்த அரசு, அதனிடம் அளிக்கப்பட்டுள்ள அளப்பரிய பொறுப்பினையும் நேர்மையான, திறமையான மற்றும் தூய அரசு ஆட்சி புரிய மக்கள் கொண்டுள்ள அதிக




எதிர்பார்ப்புகளையும் உணர்ந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் திறமை வாய்ந்த செயலாண்மையின் கீழ் இயங்குகின்ற இந்த அரசு, தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயல்படும் என்பதில் ஐயமில்லை.

# நிதித்துறையின் சாதனைகள்

போனஸ் சட்டத்தில் உச்ச வரம்பு குறித்து எந்தத் திருத்தமும் செய்யாத நிலையிலும், தமிழ்நாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் 'சி' மற்றும் 'டி' பிரிவில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் போனஸ் பெறும் வகையில் 'போனஸ்' சட்டத்திலுள்ள ரூ.3,500 என்ற ஊதிய உச்ச வரம்பினை நீக்கி ஆணை பிறப்பித்தது.

அரசுத் துறை நிறுவனங்களில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பொருட்களைக் கொள்முதல் செய்யும்போது, இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் (TENDER) மற்றும் கொள்முதல் ஒப்பந்தம் ஆகியவை அரசின் ஒப்புதல் பெற்றே முடிவு செய்யப்பட வேண்டும் என்ற ஆணையினை ரத்து செய்ததன்மூலம், பணிகள் துரிதமாக நடைபெற வழிவகை செய்யப்பட்டது.

மாநிலப் பொது நிறுவனங்களில் முதலீட்டு உச்ச வரம்பினை 'அ' இனத்திலுள்ள நிறுவனங்களுக்கு ரூபாய் 2 கோடி ஆகவும், 'ஆ' இனத்திலுள்ளவைகளுக்கு ரூபாய் ஒரு கோடி ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. அதற்கு மேல் செய்யும் முதலீட்டுக்கே 'அரசின் திட்ட முதலீட்டுக் குழுவினர்' முன் அனுமதி பெறவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் தொழில் முனைவோரின் திட்டங்கள் துரிதமாகச் செயல்படுத்த ஏதுவாகும்.

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்து நிறுவனங்களுக்கு, அரசு ரூ.91.50 கோடி அதிக மூலதனமாக வழங்கியும் அரசுக்கு வர வேண்டிய கடன் பாக்கி ரூ.110.94 கோடியை மூலதனமாக மாற்றியும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் போக்குவரத்து நிறுவனங்களின் கடன் சுமை குறைந்து, அதிக அளவில் புது வண்டிகள் வாங்கி ஓட்டி மக்களுக்குச் சிறந்த சேவை செய்யும் ஏற்பாட்டினை இவ்வரசு செய்துள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களைச் சீர்திருத்தி அமைக்கும் பொருட்டு, நான்கு நபர்கள் கொண்ட ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரை கிடைத்த பிறகு, பொது நிறுவனங்களின் சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அன்னை இந்திரா - சத்தியா சமூகநல மகளிர் மன்றம்
கீழ்க்கண்டனி கிராமம், சிவகங்கை வட்டம்
பசும்பொன் மாவட்டம்




3 பேர் உள்ள குடும்பத்திற்கு
20 கிலோ அரிசி வழங்கிடும்
நல்லாட்சிக்கு எங்கள் நல்வாழ்த்துகள்!

8ஆ-ம் பக்கத் தொடர்ச்சி

மனிதநேய உணர்வுடன் வாழ வேண்டும் என்ற அரசின் கொள்கையின் செயலாக்கத்திற்குத் துணைபுரிய அதிவிரைவுப் படையொன்று காவல் துறையின் ஒரு பிரிவாக அமைக்கப்படும். முதல் கட்டமாக நடப்பாண்டில் கோவையில் இருநூறு பேருடன் இப்பிரிவு தொடங்கப்படும்.

**சுற்றுலா**

- இடைக்காலத்தில் பாழ்பட்டுப்போன பூம்புகாரைப் புதுப்பிக்க முதல் கட்டமாக ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு.

**காவல்துறை**

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 10,000 காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியினை முடித்துள்ளது. இந்த 10,000 காவலர்களில் 3,360 காவலர் பதவிகள் பெண் காவலர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 3,360 பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 1,686 பெண் காவலர்கள் முதல் கட்டமாகப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு உள்ளனர்.

- இனக் கலவரங்கள் குறித்த விவரங்கள் அனைத்தையும் முன்கூட்டியே சேகரித்து, தகுந்த தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்காக அதிவிரைவுப்படை ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு எடுத்து அதற்காக ஆணையினையும் வெளியிட்டு முதல் கட்டமாக 275 காவலர்கள் அடங்கிய அதிவிரைவுப்படை முறைப்படி 28.3.97 அன்று ஆவடியில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- வன்முறைக் கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கும், அமைதியையும், இன நல்லிணக்கத்தையும்பேணி வருவதற்கும் வகை செய்யும் பொருட்டு, வட்ட அளவிலேயே, சமயத் தலைவர்கள் உட்பட முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மூத்த பிரதிநிதிகள் ஆகியோரடங்கிய அமைதிக்குழுக்களை ஏற்படுத்துமாறு மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும் அரசு ஆணையிட்டுள்ளது.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் - ஒவ்வோராண்டும் பள்ளி இறுதித் தேர்விலும், 12ஆம் வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப்பெறும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முறையே ரூ.6000, ரூ.4000, ரூ.2000 வீதம் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.


**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை**

- 'மக்கள் நலப்பணியாளர்கள்' மற்றும் 'நகர் நலப் பணியாளர்கள்' திட்டத்தினைப் புதுப்பித்து- அதன்படி ஆண், பெண் இருவரிலும் 25,000 பேரைக் கிராமப்புறத்திலும், 10,000 பேரை நகர்ப்புறத்திலும் ஆக மொத்தம் 35,000 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களைக்கொண்டு மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளை மக்களிடையே பரப்பி விழிப்புணர்வு வளர்க்கும் பணியை மேற்கொள்ள ஆணையிடப் பட்டுள்ளது.





- உத்தமர் காந்தி பெயரில் காவல்துறைப் பதக்கம் வழங்கும் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. கள்ளச் சாராயத்தைத் தடுப்பதில் பாராட்டத்தக்க வகையில் பணிபுரிந்த

காவல்துறைப் பணியாளர்களுக்கு இப் பதக்கம் வழங்கப்படும்.




**தீயணைப்புத் துறை**

- கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது 21 புதிய தீயணைப்பு நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அரசு ஆணை உடனடியாக வெளியிடப்பட்டு அனைத்து இடங்களிலும் முப்பதே நாட்களில் தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன.



- தீயணைப்புத் துறை இயக்குநர் முதல், தீயணைப்போர் வரையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவருக்கும், பணியில் ஈடுபட்டிருக்கும்போது, இறக்க நேரிட்டால் ஒவ்வொரு குடும்பமும் ரூ.1,00,000 பெறும் வகையில் குழு காப்பீட்டுறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தீயணைப்புப் பணியாளர்களுக்கு அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக் நகர், வண்ணாரப்பேட்டை, நந்தனம் ஆகிய இடங்களில் மட்டுமே குடியிருப்புகள் உள்ளன. ரூபாய் 72.47 இலட்சத்தில் தர்மபுரியில் 36 குடியிருப்புகளையும், ரூபாய் 2.17 கோடி செலவில் நாகப்பட்டினத்தில் 30 குடியிருப்புகளையும், பெரம்பலூரில் 31 குடியிருப்புகளையும், சென்னை அண்ணா நகரில் (மேற்கு) 39 குடியிருப்புகளையும் மற்றும் ரூபாய் 2.20 கோடி செலவில் மயிலாப்பூரில் 25 குடியிருப்புகளையும், மணலியில் 27 குடியிருப்புகளையும், தாம்பரத்தில் 13 குடியிருப்புகளையும், மதுரையில் 36 குடியிருப்புகளையும் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. அவைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. தீயணைப்புப் பணியாளர்களுக்கு, 177 இடங்களில் ரூ.94.23 கோடி செலவில், 3141 குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சமூகக் காப்பீட்டுத்திட்டங்கள்**

- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டது. நடப்பாண்டில் மொத்தம் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் 20,000 தம்பதியர் பயனடைவர்.
- இருதய அறுவை சிகிச்சை, மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை, அவை தொடர்பான மருத்துவ சிகிச்சை ஆகியவற்றிற்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் தேவையான சான்றிதழ்களுடன் விண்ணப்பித்தால், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 நிதியுதவி அளிக்கப்படும்.
- வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள, ஊனமுற்றவர்களுக்குச் செயற்கைக் கால் அல்லது கைகள் பொருத்துவதற்காக முதல்மைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 அளிக்கப்படும்.

**அரசு அலுவலர் நலன்**

- முன்னாள் கிராம அதிகாரிகளின் பிரச்சினைகளை முழுவதுமாகத் தீர்க்கும் வகையில் 5.12.1986 முதல் மாதந்தோறும் ரூ.175 ஓய்வூதியம் வழங்கவும்,

அவர்களில் சிலர் இறந்துவிட்ட நிலையில் அவர்களின் குடும்பத்திற்கு மாதந்தோறும் ரூ.100 குடும்ப ஒய்வூதியம் வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- அரசு அலுவலர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதி 60 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டது.

  முழு ஒய்வூதியம் பெறும் பணிக்கால வரம்பினை 33லிருந்து 30 ஆகக் குறைக்கவும்-ஒய்வூதியம் கணக்கிடும் முறையிலே சில மாற்றங்களைச் செய்து அவர்களுக்குச் சலுகையும் செய்யப்பட உள்ளது.

**வேலைவாய்ப்புத் துறை**

- வேலைவாய்ப்பு அலுவலகத்தில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்குக் கால நீட்டிப்பு வழங்கி, பழைய பதிவு மூப்புடன் புதுப்பித்துக்கொள்ளச் சலுகை அளித்ததால் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர்.

**மீன்வளத்துறை**

- மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்திற்கு, மீனவ சமுதாயத்திலே பிறந்து, சிறந்த தொழிற்சங்கத் தலைவராக - சுயமரியாதை இயக்கத் தலைவராகத் திகழ்ந்த ம. சிங்காரவேலர் அவர்கள் பெயர் சூட்டப்பட்டது.




- இறக்க நேரிடும் மீனவர் குடும்பங்களுக்கும் நிரந்தரமாக ஊனமுற்றவர்களுக்கும் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து வழங்கும் ரூ.35 ஆயிரத்திற்கும் மேலான கூடுதல் காப்பீட்டுத் தொகை ரூ.15 ஆயிரத்தை மாநில அரசே ஏற்றுக்கொண்டு ரூ.50 ஆயிரம் வழங்கும்.

- நடப்பாண்டில் சென்னை மீன்பிடி துறை முகத்திலிருந்து இயங்கும் மீனவர்களுக்கு 850 தகவல் தொடர்பு சாதனங்களும், கடலூர் பகுதி மீனவர்களுக்கு 540 தகவல் தொடர்பு சாதனங்களும், சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து இயங்கும் மீன்பிடித்தொழிலாளர்களுக்கு 200 தகவல் தொடர்புச் சாதனங்களும் வழங்கப்படும்.

- கடலூர் மற்றும் சின்ன முட்டத்தில் இரு கரையோரத் தகவல் தொடர்பு நிலையங்கள் அமைக்க ரூ.8.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- மீனவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 4000 இலவச வீடுகளும், இதர அடிப்படை வசதிகளும் செய்து தரும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டிற்கு நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

- மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும் நேரங்களில் உடனடியாகத் தொடர்பு கொள்வதற்காக 'வாக்கி-டாக்கிகளை' மானிய உதவியுடன் அரசு வழங்க உள்ளது.

**வனத்துறை**

- ஆறு ஆண்டுகளாக மூடப்பட்டுக் கிடந்த, நாட்ராம்பள்ளித் தொகுதியில் உள்ள தேக்குப்பட்டு சந்தன எண்ணெய் ஆலை, தற்போது இயங்கத் தயாரான நிலையில் உள்ளது.

- வனங்களில் திருட்டுத்தனமாகப் பயிரிடப்பட்ட கஞ்சா பயிர்கள் பெருமளவில் கடந்த ஆண்டு அழிக்கப்பட்டன.


- வனத்துறையில் தற்காலிகத் தினக்கூலிகளாக இருந்து 800 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

- வால்பாறையில், வாசன் தேயிலைத் தொழிற்சாலை கடந்த மாதம் திறக்கப்பட்டுள்ளது.

- தேசிய வனக் கொள்கையைப்போல் தமிழகத்திலும் மாநில வனக் கொள்கைகள் விரைவில் வகுக்கப்படும்.

- சந்தன மரக் கடத்தலைத் தடுத்திட தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாலும், கூடுதலாக வனக்காப்பாளர்கள் நியமிக்கப்பட்டதாலும், சந்தன மர வனங்களிலுள்ள ஊழல்களைக் கண்டுபிடித்ததாலும், சராசரி டன் ஒன்றுக்கு சற்று ஏறக்குறைய 2 மடங்கு வருவாய் கிடைத்துள்ளது.

- ஜப்பான் நாட்டு நிதியுதவிடன் ரூ.423.20 கோடி மதிப்பீட்டில் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப் படவிருக்கும் 'தமிழ்நாடு வன வளத்திட்டத்திற்கு' ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்தில் இருந்து ஒப்புதல் கிடைத்துள்ளது.



**தொழிலாளர் நலன்**

- கட்டிடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிலாளர் பிரச்சினைகளை ஆய்ந்தறிந்து அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க, தனித்தனியே குழுக்கள் விரைவில் அமைக்கப்படும்.

- பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பணிபுரியும் பொழுது விபத்தில் இறக்க நேரிட்டால், அவர்களின் வாரிசு தாரர்களுக்கு 50,000 ரூபாயும், அத்துடன் ஈமச் சடங்கிற்கு உதவியாக மேற்கொண்டு 500 ரூபாயும் வழங்கப்படும்.

**நகராட்சி நிர்வாகம்**

- பலத்த மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பாதிப்பைத் தவிர்க்க, சென்னை மாம்பலம் வாய்க்கால், பெரம்பூர், பட்டாளம் மற்றும் புளியந்தோப்பில் உள்ள மலேரியா தடுப்பு வாய்க்கால் ஆகியவற்றை ரூ.14.12 கோடியில் தூர்எடுக்க 50 சதவிகித அரசு மானியம்.

- மதுரை மாநகராட்சிப் பகுதியில் மதுரை புறவழிச் சாலையின் முதல் கட்டப் பணிகள் ரூ.27 கோடி செலவிலும், கல் பாலத்தின் மேல் ஒரு புதிய பாலம் ரூ.9 கோடி செலவிலும், மதுரா கோட்ஸ் சாலையில் புதிய பாலம் ரூ.9 கோடி செலவிலும் அமைக்கப்படும்.


- மதுரை மாநகரின் விசுவாசபுரி, ஹார்வி நகர், சூரப்பாளையம், கண்மாய்க்கரை ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் படிப்படியாக ரூ.1.81 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

ஏழை எளிய-முன்னேறிய
வகுப்பினர்க்கும் இலவச
வீட்டு மனைக்காக
ரூ.3 கோடி நல்கும் நல்லரசுக்கு
நல்வாழ்த்து!




தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால்
உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
தஞ்சாவூர்.

- கோவை மாநகராட்சியின் புதிய மனைப்பிரிவுகளில் ரூ.2.50 கோடி செலவில் 36 கி.மீ.சாலைகள் அமைக்கவும், சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்புப் பணிக்கென ரூ.80 இலட்சமும் ஒதுக்கீடு.
- கோவை மாநகராட்சிப் பகுதியின் புதிய மனைப் பிரிவுகளில் வடிகால் அமைக்க ரூ.15 கோடி ஒதுக்கீடு.
- திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் 85 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ.1.75 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.




**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

- ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தமது தொகுதியில் செயல்படுத்த விரும்பும் பணிகளுக்காக ஆண்டுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.
- வரும் 14.7.97 அன்று தமிழக சட்டமன்றப் பேரவை 60 ஆண்டுகளை முடிக்கும் நிலையில், சட்டமன்றப் பேரவையின் வைர விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

**உணவு**

- பொது விநியோக முறையில் நடைபெறும் முறைகேடுகளைக் களைய அமைக்கப்பட்ட சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை.
- நியாயவிலைக் கடைகளுக்கு, விற்பனையாளர்களைத் தேர்வுசெய்ய மாவட்ட அளவில் ஆள் எடுப்புச் செயலகம்.
- வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி அல்லது கோதுமை பாதி விலையில் வழங்கப்பட உள்ளது.
- பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைக்கும் பொருட்டு, மூன்று நிறத்தில் குடும்ப அட்டைகள் வழங்க முடிவு.

**போக்குவரத்துத் துறை**

- வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க தஞ்சை, நாகை காயிதேமில்லத், இராமநாதபுரம், பெரம்பலூர், திருவள்ளூர் மாவட்டங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.35 கோடி ஒதுக்கீடு.
- அரசு சாலைகளில் பல்லாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த 7 பாலங்களை நடப்பாண்டில் மீண்டும் கட்ட ரூ.2.54 கோடி ஒதுக்கீடு.
- எட்டு மாவட்டங்களில் பழுதடைந்த அரசுச் சாலைகளின் நிரந்தர சீரமைப்பிற்கென ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு.
- நடப்பாண்டில் 108 கிராமங்களுக்குச் சாலை இணைப்புகள் வழங்க அரசின் சார்பில் ரூ.3.08 கோடி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கடன் ஒதுக்கீட்டில் ரூ.40.38 கோடியும் ஒதுக்கீடு.

- சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த நேரங்களில் 100 பேருந்துகள் புதிதாக விடப்பட்டுள்ளன.
- இரவு நேரங்களில் ஆம்னி பேருந்துகளுக்குள்ள அதே வசதிகளுடன் கூடிய 50 பேருந்துகள்.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 2 புதிய வழித்தடங்களில் உடனடியாகப் பேருந்துகளை இயக்க நடவடிக்கை.
- நடப்பாண்டில் ரூ.150 கோடி செலவில், 2200 பேருந்துகள், போக்குவரத்துக் கழகங்களுக்காக வாங்கப்படுவதுடன், வரும் ஆண்டிற்கு மேலும் ரூ.292 கோடி செலவில் 3600 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட இருக்கின்றன.
- பேருந்துகள் கட்டுமானத்திற்காக வெளிநாட்டுத் தொழில்நுட்ப உறவுடன் நமது மாநிலத்தில் நான்கு இடங்களில் நவீன தொழில் நுட்பத்துடன் தொழிற்கூடங்கள் நிறுவப்படும்.
- பேருந்துகள் இயக்கப்படாத ஊரக உட்பகுதிகளுக்குத் தனியார் நிறுவனங்களின் சிறிய பேருந்துகளை இயக்க அனுமதி செய்துள்ளது. 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேம்படாத உரிய வழித்தடங்களில் மட்டும் அவை இயக்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.
- பேருந்துகள் இயக்கப்படாத ஊரக உட்பகுதிகளில் 16 கி.மீ. தூரத்திற்கு மேற்படாத உரிய வழித் தடங்களில் மட்டும் தனியார் நிறுவனங்களின் சிறிய பேருந்துகளை (VAN) இயக்க அனுமதிக்கலாம் என்று முடிவு.
- விருதுநகரைத் தலைமையிடமாகக்கொண்டு வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் புதிதாகத் துவக்கப்படும்.


**சாலைப் பராமரிப்புப் பணி**

- 1997ஆம் ஆண்டிற்குப் பிறகு சாலைப் பணியாளர்களின் புதிய நியமனம் தடை செய்யப்பட்டுவிட்ட காரணத்தால், தற்போது 4,975 பேர்களே இந்தப் பணியில் உள்ளனர். அந்தத் தடையை நீக்கி, இப்பணியை விரிவுபடுத்தி, முன்பு இருந்ததைப்போல 8 கிலோ மீட்டருக்கு இருவர் என்ற அடிப்படையில் 10,000 பேர் சாலைப் பணியாளர்களாக நியமிக்கப்படுவர்.


**கல்வி**

- நடப்பாண்டில் 168 தொடக்கப் பள்ளிகள் துவக்கப்படும். 41 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்.
- ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் நான்கைந்து ஆண்டுகளாகக் காலியாக இருந்த 11,652 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.
- நடப்பாண்டில் 60 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்.
- ஒவ்வொரு மாவட்ட நூலகத்திலும் குழந்தைகளுக்கெனத் தனிப் பிரிவு - அவர்களுக்கு ஏற்ற வகையில் நூல்களும் தள வாடங்களும் வைக்கப்படும்.

நடப்பாண்டில் ரூ.150 கோடி செலவில், 2200 பேருந்துகள் போக்குவரத்துக் கழகங்களுக்காக வாங்கப்படும்



- அறிவியல் தொழில் நுட்பவியல் பயன்பாட்டு உணர்வை மக்களிடையே பரப்ப, சென்னை மாநகரில் அறிவியல் மாநகர் 2000, திருச்சியிலும், கோவையிலும் கோளரங்கத்துடன் வட்டார அறிவியல் மையம், அமைக்க நடடிவக்கை.
- கல்லூரிகளுக்கு ஏற்படும் நன்மையைக் கருத்தில்கொண்டு, வரும் கல்வி ஆண்டில் மேலும் 14 கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதி.
- ஆசிரியர் தினத்தில் நல்லாசிரியர் விருது என வழங்கப்பட்ட, பெயர், 'டாக்டர் இராதாகிருஷ்ணன்' விருது எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.
- டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கான ரொக்கத் தொகை ரூ.1000-லிருந்து ரூ.2000 ஆக உயர்த்த நடவடிக்கை.
- டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கெனத் தேர்வுசெய்யப்படும் சிறந்த இரண்டு கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கப்படும் ரொக்கத் தொகையை ரூ.2500-லிருந்து ரூ.5000 வீதம் உயர்த்த முடிவு.
- பட்டதாரிகள் யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த முதல் மதிப்பெண் பெறும் 10 மாணவர்கள் ஆண்டுதோறும் தொழிற்கல்வி பயில ஆகும் செலவை அரசு ஏற்கிறது.
- சேலத்தில் தந்தை பெரியார் அவர்களின் பெயரில் புதிய பல்கலைக்கழகம் ஒன்று நடப்பாண்டில் தொடங்கப்படும்.
- படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்ட அளவில் பிளஸ்2 வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் அவர்கள் தொடர்ந்து மேல்படிப்பு படிப்பதற்காகும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.




- ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது விளையாட்டு அரங்கம் இல்லாத 12 மாவட்டங்களில் விளையாட்டரங்கங்கள் கட்டப்படும். கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் உள் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும்.
- பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் நன்கொடைத் தொகையுடன் விளையாட்டு மேம்பாட்டுக்காக ரூ.10 கோடி அளவில் ஒரு நிதியம் ஏற்படுத்தப்படும். மாநில அரசு இந்த நன்கொடைத் தொகைக்கு ஈடான தொகையை இந்த நிதிக்கு வழங்கும்.
- முதன் முறையாகச் சென்னையில் Information Technology Institute of Tamilnadu(ITIT) என்கிற அமைப்பு நிறுவப்படும். முதலில் பதிவு செய்யப்பட்ட சுயநிதி அமைப்பாகத் (Registered Society) துவக்கப்பட்டு, படிப்படியாக அது ஒரு சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாற்றப்படும்.

**மக்கள் நல்வாழ்வுத்துறை**

- அரசு மருத்துவமனைகளிலே வெளிநோயாளிகளுக்கான சிகிச்சை நேரம் பகல் 12 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

- ஊராட்சி ஒன்றிய தொடக்க சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கி பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- சித்த மருத்துவர்கள் வயதுமுதிர்ந்தவர்களுக்கு மாத உதவித்தொகை 150 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக் உயர்த்தப்பட்டது.

- சென்னை மருத்துவக் கல்லூரி நிகர் நிலைப் பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டுள்ளது.

- 1996-97இல் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 1997-98ஆம் ஆண்டிற்கு 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டிடம் கட்டுவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- அரசு மருத்துவமனைகளுக்கு 10 ஆயிரம் படுக்கைகளும், 6 ஆயிரம் கட்டில்களும் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

- இருதய அறுவை சிகிச்சை, மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை, அவை தொடர்பான மருத்துவ சிகிச்சை ஆகியவற்றிற்குவறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு25,000 ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படும்.

- உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்படும் 1000 ஏழைகளுக்கு, தனியார் மருத்துவமனைகள் மூலம் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**செய்தித்துறை**

- திரைப்படத் துறையிலே சண்டைக் காட்சிகளின் போது நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்கள் உயிரிழக்க நேரிட்டால்-ஒரு இலட்சம் ரூபாயும், ஊனமுற்றால் 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

- 25 பிரதிகளுக்குக் குறைவாக, குறைந்த செலவில் எடுக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 1989-ல், தொடங்கப்பட்ட திரைப்பட மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், தற்போது வழங்கப்படும் மானியத் தொகையான ரூ.3 இலட்சம் ரூ.5 இலட்சமாக உயர்த்தப்படும். அத்திரைப்படங்களுக்கு அவை முதன்முறையாகத் திரையிடப்பட்ட நாளிலிருந்து, முதல் நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

- அண்ணா நினைவிட முகப்பிலும்-காமராஜர் நினைவிட முகப்பிலும்-எம்.ஜி.ஆர்.நினைவிட முகப்பிலும் அவர்களுடைய மார்பளவு சிலைகள் வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

- முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் பெயரால் சாலை-இந்த ஆண்டு நினைவு மண்டபம்.


- பத்திரிகைத் துறையிலே 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், புகைப்படக்காரர்கள் இயற்கை எய்தினால்-அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வெ. இறையன்பு,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

சென்னைக்கருகில்
2500 ஏக்கரில்
இரண்டு துணைநகரம்
அமைக்கவிருக்கும்
தமிழக அரசை
வாழ்த்தி மகிழ்கிறோம்!





நல்வாழ்த்துகள்

எம். கே. எம். மாடு கோழி தீவனங்கள்

ஈரோடு - 2.

விரைவுப் பேருந்திலும்
ஊனமுற்றோருக்கு
இலவசப் பயணத்திற்கு
வகை செய்த தமிழக அரசுக்கு
நன்றி, நன்றி, நன்றி!




தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை லிட்.,
என்.எஸ்.ஏ.108, அஞ்சல் பெட்டி எண்.2
ஊத்தங்கரை - 635 207.




தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


வணிகர் கோரிக்கையை ஏற்று
ரூ.440 கோடி வரிச்சலுகை
வழங்கிடும் அரசை
வாழ்த்துகிறோம்!
மில்க்கா பிரெட்
ஈரோடு.